தென்றல்

வார இதழ்

ஆசிரியர்: கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம்: 'தென்றல்', சென்னை - 6.

மலர் 6 | சென்னை. திருவள்ளுவர் ஆண்டு 1990, ஆனி 20 (4-7-'59). சனிக்கிழமை | இதழ் 3



ஒவ்வொரு மொழியினிலக்கணமும் அம்மொழி பேசுமக்களின் சிறந்த நோக்கம், எண்ணம், உணர்ச்சிகளை அழியாமல் சேமித்து வைக்கும் ஓரெழுத்தோவியமாகும். பொதுவாக மேனுட்டில் ஆணவம், ஆதிக்க விருப்பம், பொருளாசை, உரிமை யுரம் முதலிய பண்புகள் வீறுபெற்று விளங்கும். அதனுலவர் மொழிகளில் இலக்கியங்கள் அக்கருத்துக்களையே வலியுறுத்துகின்றன. கிழக்கே ஆதி யறியாத் தொல்புகழ்ச் சீன மக்கள் அடக்கமும், பணிவும் கடப்பாடாக்கி, உரிமை உணர்வொழித்துத் தொழும்பை மதமாக்கி வாழ்ந்தார். சீனப் பேரிலக்கியமும் அக்கொள்கை களைப் பாராட்டிப் பரப்பி வந்தன. நாவலந்தீவில் வடவாரியர் அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு பொருளுக்கே நாடத் தக்கன என முடிவுகட்டித் தம்மொழி யிலக்கியத்தி லம்மதத்தை வற்புறுத் துவர். தமிழ்ச் சான்ருேர் தம்மவரின் அகப்புற வாழ்க்கைக்குத் தொடர் புடையதாய் மதிக்கப்படுவன வினைத் தும் செய்யுளுக்குப் பொருளாகத் தக்கவை எனக் கொண்டார்.

எவ்வகையானு மதிக்கப்படுவதெல் லாம் பொருளெனப்படும்.

> பொருளல் லவரைப்
> பொருளாகச் செய்யும்
> பொருளல்ல தில்லைப் பொருள்

என்பதனுல் இது விளங்கும். பொருட் படுத்தல் என வழக்கிலும் இது பயில் வதை நாள்தோறும் கேட்கிறேம். எனவே, எவ்வகையிலாவது மக்கள் மதிப்பிற்குரியதெல்லாம் செய்யுளுக் கும் ஏற்ற பொருளாகும் என்பது தமிழ்ச்செய்யுள் மரபாய்த் தொன்று தொட்டு நின்றுளது. தமிழில் செய் யுள் என்பது இலக்கியத்திற்கெல் லாம் பொதுப் பெயர். பாட்டும், உரையும், நூற்பாவும், பழமொழியும், விடுகதையும், சிந்து முதலிய செந் துறை வண்ண மூவகையும் எல்லாம் செய்யுளே. உள்ளுணர்வைத் தெள் ளத் தெளிக்க நன்ருகச் செய்யப் படுவது செய்யுள். செவ்விய உள்ளம் என்பது குறிப்பு. பிற்காலத்தார் செய் யுள் என்ருல் பாட்டென எண்ணு வது தவறு. ஆங்கிலத்தில் லிட்ட ரேச்சர் (Literature) எனவும், வட மொழியில் இலக்கியம் எனவும் கூறப்படுவதெல்லாம் தமிழில் செய் யுள் எனப்படும். அது பாட்டாயிருக் கலாம்; உரை நடையிலும் அமைய லாம். எவ்வகைச் செய்யுளும் மக்கள் மதிக்கும் பொருளையே பொருளாகக் கொண்டு நடக்கும்.

ஆனல் வாழ்க்கைக்குத் தொடர் பற்ற தெதுவும் பொருளெனத் தமிழர் கருதார். நல்லற வாழ்வே தமிழருக்கு எல்லாமாகும். அதனுற் ருன் பண்டைத் தமிழ்ச் சான்ருேர் உயர் வாழ்விலேயே கண்ணு டையராய்த் தம் செய்யுளனைத்தும் அந்நோக்கை வலியுறுத்த அமைத் தார். **வாழ்வுக்குத் தூய வளம் தருவது அற ஒழுக்கமென்பதும், ஒழுக்கமொன்றே மக்களை விலங் கினத்தின் வேறு பிரித்துயர்த் துங் குறி என்பதும் தமிழரின் நிலைத்த மதம்.** ஆறறி வுடைமையே மக்களை விலங்கின் வேருக்குவதென் பார் கூற்று ஆன்ற தமிழ்மரபன்று; உண்மையுமாகாது. கூர்த்த நுண் மதியுடையார் விலங்குகளை விட இழிந்த ஒழுக்குடையராய் வாழ்வதை நாம் காணுவதால் அறிவை மட்டும் கட்டளைக் கல்லாய் வைத்து மக்களை மதிப்பது தவருகும்.

அதனுல்,

> **அரம்போலுங் கூர்மைய ரேனு மரம்போல்வர்**
> **மக்கட்பண் பில்லா தவர்**

எனவும்,

> **உறுப்பொத்தல் மக்களொப் பன்ருல் வெறுத்தக்க**
> **பண்பொத்த லொப்பதா மொப்பு**

எனவும் வள்ளுவர் வற்புறுத்துவர். "ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்" என்றவர் பறையடிப்பதும். ஒழுக்க மொன்றே மக்கட் பண்பெனத் துணிந்த தமிழ்க் குறிக்கோளே யாகும்.

அறிவு சுட்டு மறமும், உணர்வு தூண்டும் விருப்பமும் முரணி மாறு படும்போது, உரனுல் விருப்பை யடக்கி அறத்தைக் கடைப்பிடித்து நடப்பது ஒழுக்கம். விருப்பத்தின் வழியே செல்வது விலங்கியல்பு. உரனுல் பொறியவித்து அறத்தா னெழுகும் உளச்செல்வம் மக்களு டைமை அஃதின்றி, விருப்பின் வழி ஒழுகுவார், பிறப்பாலும் உறுப்பாலும் மக்களே போல்வ ராயினும், அவர் மரம் போல்வர். ஒழுக்கமாம் மக்கட் பண்பில்லா மையால் ஒழுக்க உரனின்றி விருப் பின் வழி நடக்குங்கயவர் உருவத்தில் மக்களை ஒத்த ஒருவகை இருகால் விலங்கினத்தாரன்றி மக்களாகார் என்றிடித்துரைக்கும் குறளை நாம் சிந்திக்கவேண்டும்.

> **மக்களே போல்வர் கயவர் அவரன்ன**
> **ஒப்பாரி யாங்கண்ட தில்**

என்றங்கதம் பாடி வள்ளுவர் முறு வலிக்குஞ் செவ்விகண்டுவப்போம். இன்னும் அறவொழுக்கே மக்களியல் பென வலியுறுத்த வள்ளுவர், "**கடனென்ப நல்லவை யெல் லாம்**" என்று தமிழர் மதம் எடுத் துரைப்பர். இத்தமிழ்மரபி னுண்மை யையே, "உயர்திணை என்மனுர் மக்கட் சுட்டே" என்று தொல்காப் பிய நூற்பாவும் விளக்கியுள்ளது.

தமிழ்ச் செய்யுளிலக்கணத்தை வடித்து வரம்பறுத்த தொல்காப் பியரே, செய்யுட் பொருளை அகத் திணை, புறத்திணை என்றிரு கூருக வகுத்துத் தொகுத்து விரித்து விளக்கி யுள்ளமுறையும் மேற்கூறிய தமிழிலக் கியக் குறிக்கோளுக்கு சான்ருகும்.

திணை என்பது ஒழுக்கம். அகத் திணை, தமிழ்மக்களின் தனி மனை வாழ்க்கை. புறத்திணை, வீட்டின் புறத்தே பிறரொடு சேர்ந்து வாழும் பொதுக் கூட்டுறவாகும். மக்கள் யாவரும் தத்தம் மனையகத்தும், புறத்துமாக வாழ்வதில் இன்பமும், பொருளும் இடையவின்றி எய்தலும் துய்த்தலும், அதற்கு அற ஒழுக்கக் கடன் மறவாமை ஒன்றே இன்றி யமையாதெனக். கடைப்பிடிப்பதும் மக்கட் பண்பென வரையறுத்து. அவ்வாழ்வுக்குத் துணையாய் மதிக்கப் படும் பொருளெல்லாம் செய்யுளுக் கும் பொருளாகக் கொண்டார் பண்டைத் தமிழ்ப்புலவர். ஆகவே, தமிழ் இலக்கியக் குறிக்கோள் பொது வாக மக்களின் அகப்புற வாழ்வை உயர்த்துவதும், சிறப்பாக மக்களின் பண்பாக விதந்து வரையறுத்த ஒழுக்க மோம்பலுமாமென்பது தெளி வாகும். இவ்வமைப்பு முறையில் புருடார்த்தங்களும் பிறநலங்களு மடங்கும். வாழ்க்கைக்குதவா அறம், பொருள். இன்பம் வெறுத்தற்குறித்து, வாழ்வொடு பட்டன அனைத்தும் அகப்புறத்திணைப்பொருள் வகை யினிலங்கும். உயிர்வாழ்தல், மர முதல் மக்கள் வரை உயிரினங்கட் கெல்லாம் பொதுவியல் ஒழுக்கற வாழ்வே மக்களின் சிறப்பியல்பு. அறிவு தீயன விலக்கித் தூயன கடைப்பிடிக்கத் துணையா உரனுணர் வொன்றே. ஓர்மையும் ஒண்மையும் வியக்கத் தக்கவை; பயக்கவுங் கூடும். பயக்குங்கால் அறிவாய் அறத்துணையாகும். கருத்தளவில் நன்று தீது கண்டும் வாழ்க்கையில் நெறிப்பட வாராத ஒட்பத்தை, அது மிக நுண்ணிதாயினும் அறிவுடையார் கொள்ளார்.

> **சென்ற விடத்தாற் செலவிடா தீதொரீஇ**
> **நன்றின்பா லுய்ப்ப தறிவு**

அறம்பேணு மவ்வறிவு கல்வியால் வளரும். "கற்றனைத்தூறும் அறிவு". கல்வியின் நோக்கும், வாழவொழுக்க வளம் வளர்ப்பதாம்.

> **கற்கக் கசடறக் கற்பவை கற்றபின்**
> **நிற்க அதற்குத் தக**

என்னும் கல்வியியற் குறளிலும், கற்றறிந்த ஒழுக்கறத்தைக் கடைப் பிடிக்குங் கடப்பாட்டை வள்ளுவா வற்புறுத்தும் மாண்பறிக.

ஆதலால், தமிழிலக்கியக் குறிக் கோள் தமிழரின் அகப்புற வாழ்வை எல்லாத் துறைகளிலும் என்று மாக்கம் தரும் ஒழுக்கறவூ கத் தாளாண்மை கொண்டுய்த்தி வேளாண்மை வீறெய்த உதவு வே யாமெனும் உண்மை தெளிவாம். ★

தமிழ் வளரச் சிறப்பாக இருந்த அடிப்படைகளை இக்கட்டுரையில் விளக்கியிருக்கிருர் நாவலர் ச. சோமசுந்தர பாரதியார் எம். ஏ., பி. எல்.

3

சிலப்பதிகாரத்தில் நாகரிகக்கலப்பு!

டாக்டர். அ. சிதம்பரநாதன் எம்.ஏ.பிஎச்.டி.

— முன் இதழ்த் தொடர்ச்சி —

கோவலன் கொலையுண்டதையும், பாண்டிய மன்னன் இறந்ததையும், மாதரியும் கவுந்தியடிகளும் மறைந்ததையும் தான் சொல்லக்கேட்டுக் கோவலனுடைய நற்றாயும் கண்ணகியினுடைய நற்றாயும் உயிர் விட்டதால் தன் வாயாற் சொன்னது பாவம் என்று கருதி மாடல மறையவன் வடதிசைக் கங்கையில் நீராடப்போயினுன் என்பது ஒருபுறம் காணப்பட, மறுபுறம் இந்நிகழ்ச்சிகளைத் தன் வாயாற் கூறிய சாத்தன் என்னும் புலவன் பாவத்தைக் கழிக்க நீராடவில்லை என்பது சிலப்பதிகாரத்தை ஆய்ந்து நோக்குங்கால் தெரியவருஞ் செய்தி. இப்படி ஒன்றுக்கொன்று மாறுபட்ட செய்தியாக உள்ளவற்றைத் தாங்கிக்கொண்டு இருப்பதால்தான், சிலப்பதிகாரம் இருவேறு நாகரீகங்கள் ஒன்ருேடொன்று முட்டுகின்ற வேளையில் எழுதப்பட்ட காப்பியம் என்ற எண்ணம் பிறக்கிறது.

சேரன் செங்குட்டுவன் வடதிசை வேந்தரை அடக்கி அடிபணியச் செய்து கங்கைப் பேராற்றங்கரையில் அமர்ந்து படை வீரர்களுக்குப் பரிசில்கள் நெடுநேரம் வழங்கிக் கொண்டிருந்த வேளையில், அவ்விடத்தில் தோன்றிய மாடல மறையவன் தான் வந்த செய்தியைச் சொல்லுகிறவன் "என் வாய்ச்சொல்லைக் கேட்டு இன்னுர் இன்னுர் இறந்தமையால் நான் கங்கை நதியிற் படிவதற்காக வந்தேன்" என்று கூறினுன் என்பது நீர்ப்படைக் காதையால் அறியப்படுகிறது. இதனை ஒத்ததொரு சூழ்நிலையிற் பேசிய சாத்தன் என்னும் புலவனுடைய சொற்களைக் கவனிக்க வேண்டும். அவை காட்சிக் காதையில் வருகின்றன. சேரன் செங்குட்டுவன் மலைவளம் காண்பதற்காகப் போயிருந்த நேரத்தில் மலைவாழ் மக்கள் பலர் அவன்முன் தோன்றி வாழ்த்தி, "இங்கே ஒரு வேங்கைமர நிழலில் பெண் ஒருத்தி நகில் இழந்தவளாய் வானுலகு புக்க காட்சியைக் கண்டோம். அவள் எந்நாட்டவளோ? யார் மகளோ? நாங்கள் அறியோம்" என்று கூறியதை உடனிருந்து கேட்ட சாத்தன் என்னும் புலவன் அவர்கள் உரைத்ததற்கு விளக்கம் தந்தது காட்சிக் காதையில் காணப்படுகிறது. தண்டமிழாசான் சாத்தன் உரைத்தவை என்ன? சிலம்பு காரணமாகக் கோவலன் கொல்லப்பட்டான் என்பதையும், கண்ணகி வழக்குரைத்த பிற்பாடு மதுரையைச் சுட்டழித்தாள் என்பதையும், தென்னர் கோமான் செய்த தீதிற்காக இரங்கி வீழ்ந்து உயிர் துறந்தான் என்பதையும், தன் உயிரைக் கொண்டு அவன் உயிரைத் தேடினவள்போலப் பாண்டிமாதேவி உடனே மாய்ந்தாள் என்பதையும், பின்னர்க் கண்ணகி பாண்டி நாட்டு எல்லையைத் தாண்டிச் சேர நாட்டு எல்லை சேர்ந்து விண்ணுலகை அடைந்தாள் என்பதையும் கூறி விளக்கினுன். இவ்வாறு அவன் கூறியதை இளங்கோ அடிகள்,

> "ஆய்தொடி அரிவை
> கணவற்கு உற்றதும்",
> "மதுரை மூதூர்
> மாநகர் சுட்டதும்",
> "தன்னுயிர் கொண்டு
> அவனுயிர் தேடினள்போல்
> பெருங்கோப் பெண்டு
> ஒருங்குடன் மாய்ந்தனள்"

என்று கூறினர். தண்டமிழாசான் சாத்தன் மதுரை மூதூர் சுடப்பட்ட செய்தியை வாயால் சொன்னதால் பாவம் உண்டென்று கருதினுன் அல்லன்; பாண்டிமாதேவி மன்னனேடு ஒருங்கு மாய்ந்தாள் என்று தன் வாயினுல் சொன்னமையால் பாவம் வந்துற்றது என மதித்தான் அல்லன். ஒருவர் இறந்தார் என்று வாயினுல் சொன்னுல் அழுக்கு உண்டாகும் அல்லது தீண்டல் ஒட்டும் என்று கருதும் மனப்பான்மை உடையவன் அல்லன் தண்டமிழாசான் சாத்தன். இதனைத் தெளிவுபடுத்தவே இளங்கோ அடிகள் அச்சாத்தனை 'நன்னூற் புலவன்' என்றும், துன்பத்தைத் துணிவோடு எடுத்துரைத்த மேன்மையாளன் என்றும் அமைத்துக் காட்டுகின்றுர் வளைய இருந்த செங்கோலை எவ்வாறு பாண்டிய மன்னனுடைய செல்லுயிர் நிமிர்த்துச் செங்கோலாக்கிற்று என்று செங்குட்டுவன் வியந்து சாத்தனிடம் கூறினுன். இதனை வரைந்து காட்டுமிடத்து இளங்கோ அடிகள் சாத்தனை 'நன்னூற் புலவன்" என்று கூறியது நோக்கத்தக்கது.

> "துன்னிய துன்பம்
> துணிந்து வந்துரைத்த
> நன்னூற் புலவற்கு
> நன்கனம் உரைத்து"

என்று அவர் கூறிய இடத்தில், பிறர் அடைந்த துன்பத்திற்காகவோ பிறர் உற்ற சாவிற்காகவோ ஒருவர் கூசாது அதனை எடுத்துரைத்தல் கூடும் என்பதையும், பிறர் மாண்டார் என்று கூறுவதே பாவம் என்று கருதாமல் சாத்தன் துணிந்து வந்துரைத்தான் என்பதையும் அவர் அறிய வைத்திருப்பது நோக்கத்தக்கது. இச்சாத்தனை இளங்கோ அடிகளே "தண்டமிழாசான் 'சாத்தன்" என்றுரைத்திருப்பதும் நோக்கத்தக்கது. சாத்தன் பேசத்தலைப்பட்டதைப் பற்றிக் கூறும்பொழுது

> "கண்களி மயக்கத்துக்
> காதலோடு இருந்த
> தண்டமிழாசான் சாத்தன்
> இஃது உரைக்கும்"

என்றவாறு அவர் குறிப்பிட்டார். ஒரு பக்கம் செத்தாரெனக்கூறுதல்பாவம் எனக் கருதிய மாடல மறையவனும், இன்னொரு பக்கம் பிறர் மாய்ந்ததை நாவினுல் துணிவோடு எடுத்துரைக்கும் தண்டமிழாசான் சாததனும் இளங்கோ அடிகளாற் படம்பிடித்துக் காட்டப்படுகின்றனர் என்பது உற்று நோக்கினுலன்றி எவ்வாறு தெளிவாகும்?

செய்த பாவத்தைத் தண்ணீரினுற் கழுவிவிடலாம் என்று கருதிய மறையவன் இன்னொருவனுடைய செய்தி அடைக்கலக் காதையில் வருகிறது. அவன் கீரிப்பிள்ளையைக் கொன்ற பார்ப்பனி ஒருத்தியின் கணவன். வீட்டில் வளர்க்கப்பட்ட கீரிப்பிள்ளை குழந்தையைக் கொல்ல முயன்ற பாம்பினைத் தாக்கிக் கொன்றுவிட்டு நிகழ்ச்சியையும் மகிழ்ச்சியையும் தெரிவித்தற்காக வெளியே சென்றிருந்த பார்ப்பனியின் வரவினை எதிர்நோக்கி வாயினிற் காத்திருந்தது. அச்செய்தியினைத் தவறுபட உணர்ந்து, தன் பிள்ளையைக் கொன்றுவிட்டுக் கர்வத்துடன் கீரிப்பிள்ளை இருப்பதாகக் கருதிப் பார்ப்பனி மரக்கட்டையினுற் கீரியைத் தாக்கிக் கொன்றுவிட்டாள். அதனுல் விளைந்த பாவத்தைப் போக்கிக்கொள்வதற்காக வடதிசைக் கங்கையில் நீராடும் பொருட்டுப் புறப்பட்டுப் போய்க்கொண்டிருந்த மறையவன் ஒருவன் செய்திதான் அடைக்கலக் காதையிற் கூறப்படுகிறது. கீரியைக் கொன்ற மனைவியின்ற் சோறிட உண்டு வாழ்வது பிழையெனக் கருதி அவன் அந்தக் கருமத்தைத் தொலைப்பதற்காக வடதிசைக்குப் போய்க்கொண்டிருந்தான். அவனுடைய மனைவி அவன் எழுதிவைத்த ஏடு ஒன்றை எடுத்துக்கொண்டு, புகார் நகரத்துக் கடைத்தெருக்களிலும் வணிகர் வாழும் பெரும் வீதிகளிலும் உள்ள வீடுதோறும் புகுந்து. "எங்கள் கருமத்தைப் போக்கி நீங்கள் புண்ணியத்தைக் கொள்ளமாட்டீர்களா?" என்று கேட்டுக் கேட்டுச்சென்ருள் என்றும், கடைசியில் கோவலனது வீட்டில் அவனுல் ஆதரவு காட்டப்பட்டுப் பெரும்பொருள் பெற்றுப் பாவத்தைப் போக்கிக்கொண்டாள் என்றும் அறிகிருேம். பலர் வீடுகளிற் புகுந்தும் அவர்கள் அப்பாவத்தைக் கழுவுதற்குரிய வழி அது எனக் கருதாததால் பணம் தந்திலர் என ஊகிக்க இடம் உண்டன்ருே? கோவலன் மட்டும் இரங்கி, எப்படியாவது போகட்டும் என்று கருதிப் பெரும்பொருள் தந்துவிட்டான். இவள் விரும்பிய வண்ணம், பார்ப்பனருக்கென வகுக்கப்பட்ட அல்லது பார்ப்பனரால் நம்பப்பட்ட ஒரு பிராயச்சித்த சடங்கினைச் செய்தற்காக அவன் பெரும்பொருள் ஈந்தான். ஒருவேளை, கீரிப்பிள்ளை போன்று பொன்னுலோ, வெள்ளியாலோ ஓர் உருச்செய்வித்துத் தக்காருக்குத்தானம் புரிந்து பார்ப்பனி உய்ந்தனள் போலும்! அவள் கோவலனைக் கண்டபொழுது "கைப்பொருள் தர்து என் கடுந்துயர் களைக" எனக் கேட்டாள். அவனிடம் கணவன் தந்த ஏட்டினைக் காட்டினுள். அந்த ஏட்டினுள் யாதுதான் எழுதப்பட்டு இருந்தது என்பது தெளிவாகத் தெரியாது. அந்த ஏடு வடமொழியில் எழுதப்பட்டிருந்தது என்பதுமாத்திரம் சிலப்பதிகாரத்தால் தெரிய வருகிறது. அந்த ஏடு தாங்கிய வடமொழி வாசகம்,

> "அபரீட்சய நகர்த்தல்யங்
> கர்த்தல்யம் சூ-பரீட்சிதம்,
> பச்சாத்
> பவதி சந்தாபம்
> பிராம்மணீ நகுலம் யதா"

என அரும்பத உரைகாரராலும் அடியார்க்கு நல்லாராலும் கூறப்படுகிறது. இச்சொற்கள்தான் அவ்வேட்டில் இருந்தனவா என்பது தெளிவுறத் தெரியாது. அவையே அங்கு அமைந்த சொற்கள் என்று வைத்துக் கொண்டால். "ஆராயாமல் செயல்கள் செய்தல் ஆகாது; ஆராய்ந்தே செயல்கள் செய்தல் வேண்டும்; இல்லையானுல் பிறகு வருத்தம் வரும், பார்ப்பனி—கீரிப்பிள்ளை விஷயத்திற் போல" என்பதுதான் அச்சொற்களின் பொருள். இவ்வாறு எழுதப்பட்ட வடமொழி ஏட்டினை வாங்கிப் பார்த்த கோவலன் ஏமாந்து பொருள் வழங்கினுனு என்பது ஆய்தற்குரியது. அவனைக் கண்டு பேசிய பார்ப்பனி தான் அடைந்த துன்பங்களை எல்லாம் வாயினுற் கூறினுள். கீரிப்பிள்ளையைக் கொன்றதையும் கணவன் பிரிந்து சென்றதையும் கட்டாயம் சொல்லியிருப்பாள். சொன்னதோடன்றி, "நான் செயத பாவத்தைப் போக்கிக் கணவனை மீட்டும் பெறுதற்குத் தானம் புரிந்தாக வேண்டும். அதற்குரிய பொருளைத் தர வேண்டும்" எனக் கேட்டிருப்பாள் போலும்; அதனுல்தான், இளங்கோ அடிகள்,

> "மாதர்தான் உற்ற
> வான்துயர் செப்பி
> இப்பொருள் எழுதிய
> இதழிது வாங்கிக்
> கைப்பொருள் தந்தென்
> கடுந்துயர் களைக"

என வரைந்துள்ளார். அவள் நாவினுற் கூறிய சொற்கள்தாம் வடமொழி ஏடு குறித்த பொருளோ இல்லையோ என்பது தெரியாது. அவளுக்கு எந்த அளவு வடமொழி அறிவு உண்டென்பதை ஆராய்தல் இயலாது. கோவலனுக்கு வடமொழி அறிவு குறைவு என்பதுமாத்திரம் தென்படுகிறது. அவள் காட்டிய ஏட்டினில் இன்னது எழுதப்பட்டிருக்கிறது என்றும், அதனை வாங்கிப் பார்த்துப் பொருள் தந்து தன்னுடைய துயரைப் போக்கவேண்டும் என்றும் அவள் கூறியவுடன், கோவலன் அதனை வாங்கிப் பார்த்தோ வாங்கிப் பாராமலோ அவள் செய்யவேண்டிய தானத்திற்குரிய பொருளைத் தந்துவிட்டான் என்பதே சிலப்பதிகாரத்திற் காட்டப்படுவது. அவள் காட்டிய ஏட்டினில் எழுதப்பட்டிருந்ததாக அரும்பத உரையாளராலும் அடியார்கு நல்லாராலும் கருதப்படும் வாசகத்தில் தானம் செய்யப்பட வேண்டுமென்பதே குறிக்கப்படவில்லை. ஆராயாது செயலாற்றுவது தப்பு என்பதும், ஆராயாது செயலாற்றுதலால் தீமை விளையும் என்பதும் புலப்படுத்தப்பட்டுள்ளன. வடமொழிப் பஞ்சதந்திரக் கதையில் வரும் கீரிப்பிள்ளை கதையையொட்டி வழங்கிய வடமொழி வாசகம் ஒன்றை எவ்வாருே உரையாளர்கள் இங்கு பொருந்துவதுபோல் எடுத்துக் காட்டி விட்டனர். எழுதப்பட்டிருந்த வாசகம் யாதாயினும், பார்ப்பனமகள் கைந்நீட்டிப் பொருள் கேட்டாள் என்பதும், கோவலன் அவளுடைய பாவத்தைப் போக்குதற்கான பொருள் தந்தான் என்பதும் தெளிவாகின்றன. இவ்வாறு கோவலன் தானம் புரிந்த செய்தியை எடுத்து மாடல மறையவன் ஒரு நாள் அவனுக்கு நினைவுபடுத்தினுன் என்பது அடைக்கலக் காதையால் அறியப்படுகிறது.

— 11-ம் பக்கம் —

மலை ஞாலத்தில் மத வேழங்கள்!

கேரள அரசின் இன்றைய நிலை!

★★★ எதிர்க்கட்சிகள் ஆள்வது, பாரத சனநாயக போதகர்களின் கண்களைக் குத்துகின்றது. அழகு சிரிக்கும் மலைத்தோட்டம், கேரளம். அங்கு பொதுவுடைமையர் ஆள்கின்றனர். மக்களின் தீர்ப்புத்தான் அது என்றாலும் மன்னத் பத்மனாபனும் பிறரும் தந்த போர்க்குரல்-ஆணவ முழக்கம், அழகுத் தோட்டத்தை, சுடுகாடாக்கியிருக்கிறது. அந்தக் கொடுமையை விளக்குகிறார், தோழர் கூடலரசன்.

மதுரை மாவட்டத்தின் மேற்குக் கடைசி எல்லையான கூடலூர் நகர், பெரியார் மின்னியக்க நிலையம், இவைகளைத் தாண்டினால் கேரளம் நம்மை வரவேற்கும். நாம் கேரள மண்ணில் காலடி வைக்கும் முதல் இடம் 'குமுளி' என்பதாகும். சென்னை மாநிலத்திற்கும் கேரளப் பகுதிக்கும் வரம்பு கட்டப்பட்ட எல்லைக்கோடான இங்கேதான் பிரயாணிகளைப் பரிசோதிக்கவும், ஊர்திகளைக் கவனிக்கவும், அனுமதிக்குப் புறம்பான பொருட்களைக் கடத்திச் செல்வதற்குத் தடை விதிக்கவும் சர்க்கார் அதிகாரிகள் காத்துக்கொண்டுள்ளார்கள். இரவு பகல் எந்த நேரத்திலும் 'லாரி'கள் வரிசையிலே நின்று கேரளத்துப் போலீசாரின் அனுமதிக்கு ஏங்கி நிற்கும் காட்சி அனுதாபத்துக்குரியதாகும். கேரளப்பகுதி இந்தியத் துணைக்கண்டத்திலேயே எழில் நிறைந்த பலவற்றிலே ஒன்றாகும். முகவை மாவட்டத்திலே தென்படும் பாலைவனங்களை இங்கே காணமுடிவதில்லை. குமுளி என்ற இடத்தின் வரவேற்பே கேரளத்தின் வனப்பையும் வசீகரத்தன்மையையும் வாரி வழங்குவதாக இருக்கும். இந்தச் சிற்றூரில் பலதரப்பட்ட மக்களும் வதிகிறார்கள். மதுரை மாவட்டத்துத் தமிழர்களும் கேரளத்து மலையாளிகளும் ஒன்றாகப் பிணைந்துள்ளனர். இயற்கைச் செல்வம் இருக்குமளவுக்கு இங்கேயுள்ள மக்களின் வாழ்க்கைச் செல்வம் இல்லையென்பதை தெருவோரத்துக் கடைகளும் அழுக்கேறிய உடைகளும், அடைபட்டுள்ள இல்லங்களும் உணர்த்துகின்றன. இங்கிருந்து மூன்று மைல் தொலைவில் 'தேக்கடி' என அழைக்கப்படும் பெரியார் நீர்த்தேக்கம் உள்ளது. மாநிலத்தின் பல பகுதிகளிலேயிருந்து வருவோருக்கெல்லாம் பெரியார் நீர்த்தேக்கமும் அதன் இருமருங்கிலும் செழித்தும் கொழித்தும் ஆடி அசையும் மரங்களும் கண்ணையும் கருத்தையும் கவரும் கானகத்து விருந்துகளும், ஏராளம்! ஏராளம்! காட்டுக்கோழிகளும், கூட்டுப் புருக்களும், மங்கையர் நடனத்தைத் தோற்கடிக்கும் நடையிலும் மான் கூட்டமும், யானைக் குழுக்களும், நீர்த்தேக்கத்தின் கரையோரப் பகுதிகளை ஆட்சிபுரிகின்றன! நாட்டை ஆள்வோர்களில் பண்டிதர் முதல் சாதாரண பக்தவத்சலம்வரை இந்தப் பகுதியைச் சுற்றிப்பார்க்கிறார்கள். "சுந்தரரூபமே" என்று சொக்கிப் பேசுகிறார்கள். மதுவிலக்கு வீரர்களின் கண்ணெதிரே மதுக்கோப்பைகள் உடைபடும் நிகழ்ச்சிகள் நடைபெறும். மேல்நாட்டு முறைகளைத் தோற்கடிக்கும் "உயர்ரகச் சரக்கு"கள் உடல்நலத்திற்காகப் பரிமாறிக்கொள்ள கேரள சர்க்கார் ஒரு தங்கும் விடுதியை நடத்திவருகிறார்கள். "ஆரண்யவிலாசம்" என்ற மகுடமுள்ள இந்த மாளிகையின் கண்ணாடி அறைகளும், தென்றலிலே துள்ளி விளையாடும் திரைச்சீலைகளும், தொட்டால் துவளும் பட்டுமெத்தைகளும் கரம் பட்டால் கறைபட்டு விடுமோ என அஞ்சத்தக்க அலங்காரப் பொருட்களும், எத்தனையோ இன்பக்கதைகளையும், இன்பத்திலே துவங்கி இடையிலே துன்பமான செய்திகளையும் வைத்துள்ளன. சீமான்கள் மட்டுமே நுழையத்தக்க இந்த மாளிகை கேரள சர்க்காருக்கு நல்ல வருவாயைத் தருகிறது!

கேரளத்தின் எல்லை தொடங்கும் குமுளியிலிருந்து பத்து மைல் தொலைவில் 'வண்டிப் பெரியார்' என்ற வணிகக் கோட்டம் அமைந்துள்ளது, மலைச்சரிவுகளும், சரிவுகளிலே பொழியும் சாரல் மழைத் துளிகளும் அகிலும் தேக்கும், அழியாச் செல்வமெனத் தகும் தேயிலைக் காப்பித் தோட்டங்கள் முதலியனவும், நம் இதயத்தை மகிழ்ச்சியால் நிரப்புகின்றன. வளைந்தோடும் பாதைகளும், பாறைகளைப் பிளந்த சிறு சிறு பாலங்களும் இவற்றின் கீழே பாய்ந்தோடும் சிங்காரச் சிற்றாறுகளும் சிந்தைக்குத் தேனாகவும் சிந்தனைக்குச் செயல் உருவங்களாகவும் அமைகின்றன. வண்டிப் பெரியார்- பாம்பனார்-பீர்மேடு-ஏலப்பாறை - குட்டிக்கானல்-உப்புத்துறை-இப்படியே கேரளத்து ஊர்களையெல்லாம் தாண்டிச் சென்றால் நாம் இந்தியத் துணைக் கண்டத்தை விட்டுத் தாவி ஆல்பஸ் மலைப் பகுதிக்கோ-நைல் நதி தீரத்திற்கோ சென்றுவிட்ட உணர்ச்சிதான் உள்ளத்திலே உண்டாகிறது! ஏலப்பாறையிலிருந்து கோட்டயம் என்ற பெருநகர் நோக்கிப் பாதை பிரிகிறது. ஏலப்பாறை-மலையூர்களிலிருந்து வருவோரெல்லாம் இங்கே சந்திக்கிறார்கள். தேயிலைக் கொழுந்து பறிக்கும் மங்கையர் தோளிலே கூடையேந்தி இடையிலே குழந்தையையும்தாங்கிப் பணிபுரியும் காட்சி நம்போன்றார் எப்போதும் எல்லா இடங்களிலும் காணமுடியாத காட்சியாகும். கேரளத்துக் காரிகையரை-கல்லூரிக் குமரிகளையும்-இங்கே காணலாம்! அழகும் அதற்கேற்ற அறிவாற்றலும் கொண்ட பெண்களும், தேயிலைத் தோட்டத்துத்தாய்மார்களும் ஒன்றாக நின்று நினைவிலே சதிராடுகிறார்கள்! வலிமையும் வறுமையும் இந்தப் பகுதி மக்களிடையே இணைந்தே இருப்பதால்தான் வாழ்க்கை முறைகளிலே மாற்றம் காணாமல் தாங்களறிந்த ஒரே முறையில் நடைபோடுகிறார்கள்! தேயிலைத் தோட்டங்களிலும் ரப்பர்க்காடுகளிலும், மிளகுத் தோட்டங்களிலும் பணிபுரியும் ஏழைத் தொழிலாளர்கள் இந்த உலகத்தையே மறந்தவர்களாக கங்காணிகளின் கட்டளைகளையே எண்ணியெண்ணிச் செயல்படுகிறார்கள். மரம் வெட்டினாலும் கல் உடைத்தாலும் கட்டை சுமந்தாலும் உரம் பெற்ற தொழிலாளர்கள் கங்காணியின் சிறு சொல்லுக்கு அஞ்சுகிறார்கள். இதனைக் காட்டிலும் அதிகமாக இங்கே, கேரளப் பகுதி அரசியல் கங்காணிகளின் தொல்லை மிக அதிகம்! கம்யூனிஸ்ட் தொழிற் சங்கம் காங்கிரஸ்காரனுடைய தேசியத் தொழிற் சங்கம், இரண்டுமல்லாத சுயேச்சைத் தொழிற்சங்கம், இவைகளுடைய அழுத்தமும் சுரண்டலும்தான் உழைத்து வாழும் நல்லவர்களுக்குப் பரிசாக இருக்கின்றன மார்க்சிசம் லெனினிசம் பேசும் கம்யூனிஸ்ட்களைக் காணமுடியாது! சோசலிசம்-புதிய நாகபுரி சோசலிசம் பேசும் தேசிய வாதிகளையும் காணமுடியாது! முதலாளி-தொழிலாளி-ஆட்சேர்ப்பு-ஆட் குறைப்பு ஊதியக் குறைவு-கூலி உயர்வு, இவைகளே கட்சிகளுக்குக் கிடைத்துள்ள கருவிகள்! இந்தக் கருவிகள் மக்களின் கண்ணீர் அருவிகளை அடிக்கடி சந்திக்கின்றன!

கேரளப்பகுதிகளின் வனப்புமிக்க எழிலோவிய இயற்கைக் காட்சிகள் அங்கே சென்று வருவோர்க்கு நல் விருந்தாக அமைகின்றன. சாலைகளும் சோலைகளும் சுற்றியுள்ள மலர்க்காடுகளும், அவற்றிலே மங்கையர் உழைப்பும் ஆடவர் பெருமிதமும் புதுப் புதுக்காவியங்களையே தர வல்லன. போற்றினாலும் புழுதி வாரித் தூற்றினாலும், வேல்மறவர் படைக்கு வேலை வந்துவிட்டது. வீரரே ஓடி வாரீர் வீணரே விலகி நிற்பீர் எனத் தென்றல் பண்ணிசைப்போர்க்கு வண்டிப் பெரியார் வட்டாரம் வகையான காட்சிகளை தொகை தொகையாக எடுத்து வழங்கக் காத்திருக்கிறது; கரம்நீட்டி அழைக்கிறது! கேரளம், ஏலம் - கிராம்பு - மிளகு - போன்ற உயிர்ச்செல்வங்களின் களஞ்சியம்! ஏலம் கொண்டோன் ஞாலம் வெல்லுதல் எளிது என்பர், அந்தச் செல்வத்தின் அணைப்பிலே திளைத்திருப்போர்! கேரளத்தின் எழிற்கோலங்கள் துயல்நீங்கி எழும் தோகைமயிலாள் சேடியரைத் தேடும் மாட்சியினை உருவாக்குவனவாகும்! சிற்பி சிலையாக்குவான்; கலைஞன் தன் எண்ணத்தை காதல் மாளிகையாக்குவான்; கவிஞன் புதியதோர் உலகத்தையே சமைப்பான்! ஆனால் கேரளத்தின் எழில்வண்ணமெல்லாம், ஏழையரின் தோற்றம் இதயத்திலே படிகின்றபோது எண்ணத்திலே நிற்காமல் மறைகின்றன. காட்டாற்றுக்கரைகளில் உடை வெளுக்கும் மங்கையர் மாற்றுத்துணியில்லாததால் உலரும்வரை சத்திருக்கின்றனர். உல்லாசமான மாளிகைகளையும் மின்னலெனச் செல்லும் கார்களையும், அவர்கள் இதயம் சுரக்கும் இரத்தத்துளிகள் அடிக்கடி சந்திக்க முடிவதில்லை. ஓடம் தள்ளி ஆற்றுக்கரை தொடர்ந்து சுற்றி மீன் பிடிப்போன் மேனியிலே சேறு உண்டு. அவன் கண்ணெதிரே தேயிலைத்தோட்டங்களும் அந்தத் தோட்டங்களுக்கான சுந்தரர்களும் சுந்தரிகளும் இருப்பார்கள்! இவன் காலத்தின் கோலமெண்ணிக் கண்ணீர் வடிப்பான். ஏழையின் கண்ணீர் எரிமலை என்பதை எத்தனை பேர் புரிந்து வைத்துள்ளார்கள்! எனவே அவன் இறந்துகொண்டே வாழவேண்டியவனாக இருக்கிறான்! செல்வச்சீமான்களின் தங்குமிடமான கேரளம் ஏராளமான நடைபிணங்களை-நடமாட முடியாத நல்லவர்களை ஒவ்வொரு எஸ்டேட்டிலும் குடியேற்றியுள்ளது. உழைக்கிறார்கள்-ஆனால் அவர்கள் பலன்காணாப் பாட்டாளிகள். அவர்களைப் பற்றிய

கூடலரசன்

செய்திகளை நாம் எழுதி முடித்துவிட இயலாது. எண்ணங்கள் பட்டுப் போனால்தான் கேரளத்து எளியோரை மறக்கமுடியும்! தாழ்ந்த சமுதாயத்தாரை மறந்துவிட்டவர்களின் அரசியல் விளையாட்டுக்கள்தான் இன்று கேரளத்தின் அமைதிக்குப் பெரும் புயலாக அமைந்துள்ளன! கேரளத்துக் கதையைச் சொல்லி, கிளர்ச்சிகளைத் தொடருகிறேன்.

—அடுத்த இதழில்—

அரசியல் புயலிடை அழகின் சிரிப்பு!

ஆங்கில அரசியலமைப்பு

அரசியல் அகராதியில், "அரசியலமைப்பு" என்ற தொடர், ஒரு அரசாங்கத்திற்கு வேண்டப்படும் இன்றியமையாத அமைப்பு முறைகளைப் பற்றியும், ஒரு நாட்டுமக்களுக்கும் அரசாங்கத்துக்குமிடையில் நிலவ வேண்டிய உறவு முறைகளைப் பற்றியும் வரையறுத்துக் கூறும் ஒரு சட்டம் அல்லது சம்பிரதாயம் என்று கூறலாம். ஆங்கில அரசியலமைப்பின் தனிச் சிறப்பு என்னவென்றால் அது எந்த எழுதப்பட்ட ஒரு பத்திரத்தினையும் குறிக்காமல், முழுமையான நடைமுறைக்கு ஏற்ற அரசாங்க அமைப்பு முறையைச் சுட்டுவதேயாகும். இக்காரணத்தால் ஆங்கில அரசியலமைப்பினை எழுதப்படாத, ஆனால், கால மாறுதலுக்கேற்ப வளைந்து கொடுக்கக்கூடிய ஒரு சீரிய பத்திரம் என்று துணிந்து கூறலாம். இவ்வமைப்பு நிலையானதொரு தத்துவத்தையும் சமூக வழக்கங்களையும் பிரதிபலிக்கும் தொடர்ந்த சிறு மாறுதல்களை அனுமதிக்கும் அருந்திறத்தையும் பெற்றுத் திகழ்கிறது. இதனால் ஆங்கில அரசியலமைப்பு. அடிப்படையில் எத்தகைய மாறுதல்களையும் உள்ளிட்டதாகவும், ஆனால், அதே சமயத்தில், பிறநாட்டு அரசியலமைப்புக்களினும் விழுமியதொன்றாக விளங்குவதையும் நாம் காணலாம். இது தனக்கு மாற்றம் வேண்டுமென்றால் வேற்று நாடுகளைப்போல் மக்களின் புரட்சிக்காகவோ, இராணுவப் புரட்சிக்காகவோ காத்திருக்கத் தேவையில்லை. மேலும் இவ்வமைப்பு எஞ்ஞான்றும் வளர்ந்துகொண்டேயிருக்கும் தகைமைத்தாகலின், என்றும் அது முடிவடைந்துவிட்டது என்று கூறிடமுடியாது. இது அரசியல் வல்லுநர்களின் பெரு வியப்பிற்கும் போற்றுதலுக்கு முரியதொன்றாக மிளிர்வதன் காரணம் என்னையோவெனின், அது ஏதோ ஒரு காலத்தில் இயங்கிய எந்தக் குறிப்பிட்ட அம்சங்களையும் ஒட்டி எழுந்ததாக இல்லாமல் ஆங்கிலேயர்கள் அனைவருடைய சமூக, பொருளாதார, அரசியல் வாழ்க்கையையும் தன்னகத்தே கொண்டு மிளிரும் ஒரு அரிய அமைப்பாக இலங்குகிறது என்பதுதான். இவ்வாறு ஆங்கில அரசியலமைப்பு, பல்லாற்றானும் சிறந்து விளங்குவதற்கு. அதன் நீண்ட கால வளர்ச்சியும், அது அவ்வப்போது பெற்ற அரிய அனுபவமும்தான் காரணம் எனின் அது மிகையன்று.

அரசியலமைப்பின் வளர்ச்சி

இன்றைய ஆங்கில அரசாங்கம், டிராய் நகரத்து மதில்களுக்கிடையே கிரேக்க நாட்டு நல்லிசைப் புலவன் 'ஹோமர்', பண்டைக் காலத்து ஆதிவாசிகளான கிரேக்கர்களைக் குறித்து எழுதிய நாகரிகப் பண்பாட்டையும், ரைன் நதிக்கரையில் அந்நாளில் காட்டுமிராண்டிகளாக வசித்து வந்த ஆங்கிலேயர்களின் முன்னோர்களைப் பற்றி "டாசிடஸ்" என்பான் தனது நூலில் குறிப்பிட்டுள்ள கருத்துக்களையும் நமக்கு நன்கு நினைவூட்டும். பண்டைக் காலத்தில் அரசாங்கம் கீழ்க்கண்ட மூன்று முக்கியக் கூறுகளை உடையனவாய்த் திகழ்ந்தன. அவை (1) தலைவன் அல்லது அரசன் (2) முதியோர் குழு அல்லது அறிஞர் குழு (3) போர் வீரர்களின் அணி அல்லது மக்களணி. இம்மூன்று கூறுகள்தான் இன்றைய ஆங்கில அரசாங்கத்தில், அரசன், அமைச்சர் சபை, பாராளுமன்றம் என்ற பெயர்களால் இயங்குகின்றன.

ஆங்கில அரசியலமைப்பின் வளர்ச்சியினைப் பல்வேறு பகுதிகளாகப் பிரிக்கலாம். முதலாவதாக ஆங்கிலோ சாக்ஸானியர்களின் அரசாங்கம் :—

டியூடானிக் படையெடுப்பாளர்கள் இங்கிலாந்திலேயே தங்கி, ஆங்கிலோ சாக்ஸானியர்களின் அரசு அமைந்தபொழுது, அரசாங்கம் முடியாட்சியினையே உடையதாக இருந்தது அரசன் "விட்டன் கிமாட்" என்றழைக்கப்பட்ட அறிஞர் குழுவின் ஆலோசனையின் பேரிலேயே நாட்டை ஆண்டு வந்தான். இவ்வாட்சியில், அதிகாரத் தராசின் தட்டுக்கள் நாள்தோறும் உயர்ந்து கொண்டும் தாழ்ந்து கொண்டும் இருந்தன. அரசன் சக்தி வாய்ந்தவனாக இருந்து ஆலோசனைக் குழு வலிவற்றதாக இருப்பின் அரசனின் ஆதிக்கம் மேலோங்கி நிற்கும். ஆலோசனைக் குழு, மிக்க சக்தி வாய்ந்ததாயின், அரசனின் வலிமை குன்றும். அரசனின் ஆதிக்கம் வெகுவாக உயர்ந்து, அவன் எதேச்சாதிகாரியாக மாறிவிடாமல் 'விட்டன்கிமாட்' என்ற குழு தடுத்து வந்தது. அக்காலத்தில் ஆட்சியின் மூன்றாவது அங்கமாகிய மக்களணி தேசிய ரீதியில் அமையவில்லை. அதனால் மக்களின் பிரதிநிதித்துவ சபைகள் மலர்வதற்கு இயலாமல் போயிற்று.

பற்பல வகுப்பு மக்களை உள்ளிட்டதுதான் ஒரு நாடு என்றாலும், அக்காலத்தில் மக்களுக்கிடையில் யாதொரு தொடர்புமில்லாமல் இருந்தது. ஆனால் தல சுய ஆட்சியைப் பொருத்தமட்டில்—அதாவது ஷையர் அல்லது கவுண்டிகளில், ஷையர்-மூட் என்ற உருவத்தில் சுதந்திர மக்கட் குழுக்கள் காணப்பட்டன. இக்குழுக்கள் அரசாங்க அலுவல்களில், மக்கள் பங்கு கொள்ள வேண்டுமென்ற நல்லெண்ணத்தாலும், எதிர்காலத்தில், தேசிய ரீதியில் நாட்டின் நடவடிக்கைகள் நடைபெற வேண்டுமென்ற விருப்பத்தாலுமே பெரும்பாலும் எழுந்தன என்று கூறலாம்.

கி. பி. 1066-ம் ஆண்டில் நடந்த ஹேஸ்டிங்ஸ் யுத்தத்தில் நார்மானியர்கள் அடைந்த வெற்றி, உடனடியாக ஆங்கில அரசியலமைப்பில் குறிப்பிடத்தக்க மாறுதல்கள் எதனையும் தோற்றுவிக்கவில்லை. ஆனால் நெடுநாட்களுக்கு முன்பே, அரசனின் ஆலோசனைக்குழு இருவேறு கூறுகளாகப் பிரிந்தன. ஒன்று நிர்வாகத்தை ஒட்டியது. இதுதான் நாளடைவில் "பிரிவிகவுன்சில்" ஆக மாறியது. ஏனையது இதனினும் மிகப் பெரிய குழு. இதுதான் பிற்காலத்தில் "பிரபுக்கள் சபை"யாக மாறியது.

இடைக்காலத்தில், ஆங்கில அரசியலமைப்பில் தோற்றுவிக்கப்பட்ட பெரிய மாறுதல், அரசாங்க நிர்வாக யந்திரத்தோடு, "காமன்ஸ் சபை" என்ற பொதுமக்களின் பிரதிநிதித்துவம் பெற்ற ஒரு சபை இணைக்கப்பட்டதாகும். காமன்ஸ் சபை. தொடக்கத்தில் நவீன அரசாங்க முறைகளைத் தாங்கி நிற்கவில்லை. இடைக்கால அரசாங்க முறைகளையே அது பெரும்பாலும் பிரதிபலித்தது. சுருங்கக் கூறின், இச்சபை, பலதுறைப்பட்ட மக்களின் பிரதிநிதித்துவம் பெற்ற சபையாக மிளிராமல், கிராமப்புறத்து நிலச்சுவான்தார்களையும். நகர்ப்புறத்துச் செல்வந்தர்களையும் உள்ளிட்ட சபையாகவே விளங்கியது. பிரபுக்கள் சபை, மதத்தலைவர்கள் பிரபுக்கள் இவர்களின் பிரதிநிதித்துவ சபையாகவே மிளிர்ந்த காரணத்தால், காமன்ஸ் சபை, கோமகன்கள், வரி விதித்துப் பணம் பெறக்கூடிய செல்வந்தர்கள் இவர்களின் பிரதிநிதித்துவ சபையாகவே இலங்க முடிந்தது. எனினும் காமன்ஸ் சபை, நாள்தோறும் தன்னுடைய பிரதிநிதித்துவ முறையில் முன்னேற்றம் அடைந்ததன்றி, அரசன் தனது விரிந்த அதிகாரங்களைத் துறந்த நேரத்தில், அப்பொறுப்புக்களை ஏற்றுக்கொள்ளும் தகுதிபெற்றிருந்தது. இடைக்காலத்தில், அரசனே அரசாங்கத்தின் முக்கிய அங்கமாக விளங்கினான். அவனுடைய ஆதிக்கத்தின்கீழ், அதிகாரிகள் அரசாங்கப் பணிகளைக் கவனித்துவந்தார்கள். நீதிபதிகள் நியாயம் வழங்கிவந்தனர். பாராளுமன்றம் தொடக்கத்தில் தன்னுடைய குறைகளை ஒருவாறு தீர்த்துக் கொண்டபோதிலும் அது பெரும்பாலும் அரசனுக்குப் பொருள் வழங்கும் நிறுவனமாகவே விளங்கியது. ஆனால் அரசன் அவிழ்த்துவிடப்பட்ட சர்வாதிகாரியல்ல. ஏனெனில் அவனும் அரசாங்கச் சட்டங்களுக்குக் கட்டுப்பட்டவனாக இருந்தான். இங்கிலாந்தில், மக்கள் சட்டங்கள் மனிதனால் செய்யப்பட்டவை அல்லவென்றும், இயற்கையிலேயே அவை மக்களோடு இணைந்து கிடப்பவை என்றும், அதனால் அரசன் உள்ளிட்ட எல்லோரும் சட்டங்களுக்குக் கட்டுப்பட்டவர்கள் என்றும் மனதார நம்பினர்.

கி. பி. 1509-ம் ஆண்டில் எட்டாம் ஹென்றி ஆட்சிபீடமேறியதும், கிளர்ந்தெழுந்த சீர்திருத்தம் பிரிட்டனைமட்டுமன்றி பிற ஐரோப்பிய நாடுகளையும் உலுக்கத் தவறவில்லை. இச்சீர்திருத்தம் தேசிய இங்கிலாந்தைச் சுதந்திரமுள்ளதாகவும், தன்னைத் தானே நம்பி வாழும் தகுதி கொண்டதாகவும் ஆக்கியது. முடிதரித்த மன்னனின் நிலையை அது வெகுவாக உயர்த்தியது. புரட்டெஸ்டண்டு நாடுகளில் மன்னர்களைப் போப்பின் அதிகாரத்தில் இருந்து விடுவித்தது. அக்காலத்தில் போப், கிறித்தவ மதத் தலைவர் என்ற முறையில் அரசர்களையெல்லாம் ஆட்டிப் படைக்குமளவுக்கு மிக்க வலிமை பெற்றிருந்தார். டியூடர் வமிசத்துக் கடைசி அரசியான எலிசபெத்தை, போப். மதத்திலிருந்து விலக்கியதோடன்றி, அரச பதவியில் இருந்து விலக்குவதற்கும் பெருமுயற்சி செய்தார். சீர்திருத்தம் தனது சிறகுகளை விரிப்பதற்குமுன் போப், இம்முயற்சியில் ஈடுபட்டிருப்பின், ஐரோப்பாவிலும். குறிப்பாக இங்கிலாந்திலும் எத்துணையோ மாற்றங்கள் நிகழ்ந்திருக்கும். சீர்திருத்தம், சட்டமியற்றும் கொள்கை வளர்ச்சிக்கு உறுதுணையாக நின்ற காரணத்தால், மன்னரின் நிலையை அது பெரிதும் உயர்த்தியது. சட்டங்கள் மன்னர்களால் ஆக்கப்படுபவை என்ற காரணத்தால் அரசன் அச்சட்டங்களுக்குக் கட்டுப்பட்டவன் அல்ல என்ற கருத்தை, அக்காலத்து ஐரோப்பிய மக்கள் கொண்டிருந்தனர். ஆனால் இங்கிலாந்தைப் பொருத்தவரை, ஏனைய ஐரோப்பிய நாடுகளைப்போலன்றி, சக்தி வாய்ந்த பாராளுமன்றம் இருந்ததால், அதற்கும் மன்னனுக்கும் அடிக்கடி சச்சரவுகள் நிகழ்ந்தவண்ணமிருந்தன.

ஆங்கில முடியரசின் வளர்ச்சி சீர்திருத்தம் எழுந்த காரணத்தால், டியூடர்கள் காலத்தில் மிக உன்னத நிலையில் இருந்தது. காரணம் அக்காலத்தில் மன்னர்கள் மட்டுமின்றி, மக்களும் அரசர்களின் தெய்வீகஉரிமையில் நம்பிக்கை வைத்திருந்தார்கள். இந்தத் "தெய்வீக உரிமை" என்னவென்றால், ஆண்டவனே மணிமுடியை அரசனுக்கு நேராக அளிக்கிறான் என்பதாகும். அதனால் குடிமக்கள் அரசனின் செய்கைகளைக் கண்டிக்கவோ அல்லது குறை கூறவோ அருகதையற்றவர்கள் என்று அக்காலத்து மன்னர்கள் கருதினார்கள். இந்த மடமைக் கொள்கை பதினேழாம் நூற்றாண்டில் நிலவி வந்ததன் காரணம் என்னவென்றால், அக்காலத்து மக்கள் அரசியல் தெளிவு அற்றவர்களாக இருந்ததுதான் ஆனால் பாராளுமன்றம் அப்பொழுது மிக்க சக்தி வாய்ந்ததாக விளங்கியதால், சச்சரவின்றி அதனை அடியோடு ஒழித்துக் கட்டுவதற்கு அரசர்களால் முடியவில்லை.

பிரிட்டனின் வரலாற்றில், புரட்சிக்கனல் பூப்பதற்கு உறுதுணையாக இருந்த பதினேழாம் நூற்றாண்டு, சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதொன்று எனில் அது மிகையாகாது. இந்நூற்றாண்டில்தான் அரசனுக்கும் பாராளுமன்றத்திற்குப் இடையே "யார் தலையாய அதிகாரங்கள் வகிப்பது" என்பது பற்றி நிகழ்ந்த சச்சரவுகளின் விளைவாக. சில அடிப்படை அரசியல் விவகாரங்கள் நிர்ணயிக்கப்பட்டன. சுமார் ஐம்பதாண்டுகள் தொடர்ந்து நடந்து வந்த உள்நாட்டுப் போர்களுக்கும் அரசியல் சோதனைக்கும் பின், அரசனுக்கும் பாராளுமன்றத்திற்கும் இடையில் நடந்த சச்சரவுகளில் பாராளுமன்றமே வெற்றி பெற்றது 1688-ம் ஆண்டில் கிளர்ந்தெழுந்த உன்னதப் புரட்சி இங்கிலாந்தில் 'வரம்பு செய்யப்பட்ட முடியாட்சி" உதயமாவதற்குப் பெரிதும் உதவிற்று. இது முதல், அரசன் பாராளுமன்றம் அளித்த உரிமையின் மூலமே தனது ஆட்சியினை நடத்தி வந்தான். அரசனுக்கும் பாராளுமன்றத்திற்கும் இனிச் சச்சரவு ஏற்பட்டால், பாராளுமன்றத்தின் கரமே ஓங்கும் என்ற ஒரு புதிய சூழ்நிலை உருவாகியது. இன்றையப் பாராளுமன்றத்திற்கு, உன்னதப் புரட்சிதான் வித்திட்டது என்பது மறுக்கமுடியாத உண்மையாகும்.

— 9-ம் பக்கம் —

"போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன்; எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன்!"

எண்ணம்

மலர் 6 | 4—7—'59 | இதழ் 3

மாயவரம் பொதுக்குழு!

மறவர்தானை-புலவர் அணி-இளைஞர் வரிசை - கிளர்ந்தெழுந்திடும் நல்ல காட்சி எங்கேனும் நடக்கிறதென்றால், அங்கே தி. மு. கழகம் கூடு கிறது என்றுதான் பொருள்!

மொழியுரிமை காக்கும் பணியா? இனஉணர்ச்சிப் போராட்டமா? தொழிலாளர் வர்க்கத்தின் கிளர்ச்சியா? எங்கே இவை நடந்தாலும், அங்கே தி. மு. கழகம் கொடி ஏந்தியிருக்கிறதென்று பொருள்!

வெங்குருதி கொட்டுகின்ற விடுதலை வீரர்களை-வாழ்வையும் சாவையும் சமமாய்க் கருதும் கடமையுணர்ந்த காளைகளை-தாயக நலனே தமது மூச்சு எனக் கொண்டுலவும் சிங்க மைந்தர்களை, எங்கேனும் கண்டால் உறுதி யாகச் சொல்லுவர் நாட்டோர்—"அவர்கள் தி. மு. கழகத் தோழர்கள்!" என்று.

இந்த நிலைகளை நாட்டில் எங்கேனும் கண்டால், எல்லோரும் உறுதி யாகச் சொல்கின்றனர், "இவை தி. மு. கழகத்தின் முத்திரைகள்" என்று! நம் நடவடிக்கைகள் நாட்டு மக்களிடம் அந்த அளவுக்குப் பதிந்துவிட்டன. நம் கருத்துக்களும் செயல்களும் திராவிடர் சிந்தையில் குடிகொண்டிருக் கின்றன.

நமது ஒவ்வொரு நடவடிக்கையையும் நாட்டுமக்கள் கூர்ந்து கவனிக் கின்றனர். நாம்தான் இந்த நாட்டின் நல்வாழ்வுக்கு வழிபல காணமுடியும் என்று நம்புகின்றனர். நாம் தொடங்கும் பணிகள் அனைத்தும் வெல்வதற்கு, தம் துணைகளைப் பல வழிகளிலும் தருகின்றனர். ஆமாம்! நம் எண்ணம் நாட்டுமக்கள் எண்ணம்; நம்செயல் நாட்டுமக்கள் செயல்; நம் வேலைகள் அனைத்தும் நாட்டுமக்கள் வேலைகள். இப்படி ஒரு பொன்னான பாதையில் சொல்லும் வாய்ப்பு இதுவரை எந்த இயக்கத்திற்கும் இருந்ததில்லை புதிய வரலாற்றைப் படைத்தவர்கள் நாம் எனப் பெருமைப்படுகிறோம்.

நாட்டிலே நமக்கு இந்த வரவேற்பும் வாழ்த்தும் இருப்பது ஏன்? நாம் எந்தச் செயலையும் அவசரப்பட்டுத் தொடங்குவதில்லை; ஆர அமர ஆராய்ந்து தொடங்குகிறோம். தொடங்கிய எந்தச் செயலிலும் தோல்வி கண்டதேயில்லை; வாகையே சூடியிருக்கிறோம். இந்தப் பெருமைக்குரிய வழிகளை நாம் வகுத்துக் கொள்ள இருக்கும் ஒரே இடம்தான், பொதுக்குழு. நாட்டில் எழும் ஒவ்வொரு முக்கியப் பிரச்னையின்போதும் நமது பொதுக்குழு கூடுவதும், திராவிடமெங்கிலுமிருந்து வரும் உறுப்பினர்தள் தம் தம் கருத்துக்களை வழங்குவதும், கூறப்பட்ட கருத்துக்களை ஆராய்ந்து பார்த்து, தீரச் சிந்தித்து, தக்க முடிவுகள் எடுப்பதும் அனைவரும் அறிந்ததே. அதனால்தான், மற்ற எந்த இயக்கத்தின் பொதுக் குழுவோ, செயற் குழுவோ கூடுகின்றபோது இந்த அளவு ஆர்வமும் அக்கறையும் மக்களிடம் எழுவதில்லை.

காங்கிரசார் செயற் குழு-அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி-கூடுகிற தென்றால் நேரு வருவார்; தேபர் வருவார்; இந்திரா வருவார்; காமராசர் கலந்துகொள்வார்; இந்தியா வெங்குமுள்ள, தாசானு தாசர்களும் அடிமை கொண்ட தலைவர்களும் வருவார்கள். ஆனாலும் மக்கள் ஆர்வத்தோடும் அக்கறையோடும் கவனிப்பதில்லை! அவர்கள் நாட் கணக்கில் கூடிக் கூவிப் பிதற்றுவர். ஆயிரம் ஆயிரம் யோசனைகளைத் தீட்டிக் கிழிப்பர். மொத்தத்தில் பொழுது கழிவதுதான் மிச்சமாகுமே ஒழிய, உருவான பலன் எதுமிருக்காது. காகிதத்தில் வரையப்படுகின்ற கேலிக்குரிய கோடுகளாகவே அவர்களின் தீர்மானங்கள் ஆகிவிடுகின்றன! இதனால்தான் மக்கள் ஆதரவு திரள்வ தில்லை, காங்கிரசார்க்கு.

"பூதலம் முழுமைக்கும் புது வாழ்வு" பொழிய வந்திருக்கும் பொது வுடைமையர் நிலையும் இதுவே! ஆகாயத்தை முட்ட, வார்த்தைக் கோபுரங் களை உருவாக்கிக் காட்டுவார்கள் அவர்கள். ஆனல் அத்தனையும் காற்றோடு பறந்து போகும் உமியாய்விடும். அவர்களே சொல்வார்கள், "முந்திய ஆண்டு நாங்கள் செய்த முடிவு தவறு; இப்போது அதைத் திருத்திப் புதிய முடிவு காண்கிறோம்!" என்று. இதனல் மக்களாதரவு காங்கிரசார்க்குக் கிடைக்கும் அளவுதான், பொதுவுடைமையர்க்கும் கிடைக்கிறது.

மொத்தத்தில் இந்த அகில இந்திய இயக்கங்களும், கூலிக்கு மாரடிக் கும் பிற இயக்கங்களும் நல்ல திட்டங்களை உருவாக்க முடிவதுமில்லை; உருவாக்கும் திட்டங்களை நிறைவேற்ற முடிவதுமில்லை.

நாமோ, நெருக்கடியான நேரங்களில் பொதுக் குழுவைக் கூட்டியிருக் கிறோம்; பொருத்தமான முடிவுகளை எடுத்திருக்கிறோம். போட்ட திட்டங் களில்-கலந்த போராட்டங்களில் வெற்றியும் பெற்றிருக்கிறோம்.

இந்தி ஒழிப்புப் போர்- 52 தேர்தலுக்கு நேசக்கரம் நீட்டியது-'57 தேர்தலில் கலந்துகொண்டது முதலிய அனைத்தும் நம் பொதுக் குழுவின் முடிந்த முடிவுகள். இம்முடிவுகள், தவறு என்று நாமே பின்னாளில் சொன் னதுமில்லை; "ஆவடி-நாகபுரி மாடல் சோசலிசம்"போல் காகிதத் திட்டங் களாக இவை இருந்ததுமில்லை.

மற்றொன்று; நாம் எடுத்த திட்டங்களுக்கும், விடுத்த கோரிக்கை களுக்கும் நாட்டில் எப்போதும் எதிரொலி இருந்துகொண்டே வந்திருக்கிறது; வருகிறது.

காங்கிரசாரின் நாகபுரித் தீர்மானத்திற்கு ஆதரவு தருவாரில்லை; பொது வுடைமையரின் "கலை இலக்கிய ஞானஸ்நான"த்திற்கு வரவேற்புமில்லை. தி. மு. கழகம் தந்த திட்டங்களுக்கோ, திராவிடமெங்கும் வரவேற்பிருக் கிறது; வைரநெஞ்சக் காளையர் வந்திருக்கின்றனர், அணி அணியாய்! இவைதான் நம் பெருமைக்குரிய வெற்றிச் சின்னங்கள். இவ்வழியில் மற்று மொரு வெற்றி முத்திரையைக் குத்திக்கொள்ளும் கட்டம் வந்திருக்கிறது.

ஆலினைப்போல் ஆயிரம் கிளைவிழுதுகளை விட்டு நாம் வளர்ந்தாலும், நம் மிடையே உள்ள முறையான கட்டுப்பாடும், சட்டதிட்டமும்தான் நம்மை நெடு நாளைக்கு வாழவைக்கும். கேணியில், ஏரித் தண்ணீர் கிடந்தாலும் பாத்திகட்டி பாய்ச்சினால்தானே பயிர் காக்கப்படும். அதுபோன்றே நம் கழகத்தின் வருங் காலத்தை உறுதிப்படுத்தும், சட்டதிட்ட திருத்தம் மாயவரத்தில் 11, 12 தேதிகளில் கூட இருக்கும் பொதுக்குழுவில் நிறைவேற இருக்கிறது.

அத்தோடு நாட்டிலே கிளர்ந்தெழுந்துள்ள பல்வேறு பிரச்னைகளிலும் நம் கருத்தைத் தெரிவித்து மக்கள் அணியைத் திரட்டவும் கடமைப்பட்டுள் ளோம். ஆமாம்! மாயவரம் பொதுக்குழு முடிவுகளால் கட்சியினுடைய பாதை பலவகையிலே தீவிரமடையக்கூடும். தினவெடுத்த தடந்தோளர்க்கு வேட்டை கிடைக்கும்; திராவிடத்திற்கு நல்வாழ்விற்கொரு புத்தொளி அமை யும்! அந்த முடிவுகளைத் தரும் மாயவரம் பொதுக்குழுவின் முடிவுகளைத் திடமனதுடன் ஏற்கிறோம்! வரவேற்கிறோம்! ★

அண்ணா!

அறிஞர் அண்ணா அவர்கள் கடந்த சின்னாட்களாகக் காய்ச்சலால் வருந்தி வந்தார்கள். இப்போது பத்தியம் நீங்கி, பழைய ஆரோக்கியத்தை அடைந்திருக்கிறார்கள். என்றாலும், இன்னும் பத்து நாட்களுக்கு, அவர்கள் ஓய்வாக இருக்கும்படி மருத்துவர்கள் கூறியுள்ளனர்.

மாநகராட்சி மன்றத் தலைவர் அ. பொ. அரசு அவர் களும் நம் ஆசிரியர் கண்ணதாசன் அவர்களும் 29-6-'59 அன்று அண்ணா அவர்களின் இல்லம் சென்று நலம் கேட்டு வந்தார்கள்.

தலைமைக்கழக அறிக்கை: 6/59

உறுப்பினர் சேர்த்தல்-புதுப்பித்தல் தவணை நீடிப்பு

உறுப்பினர் சேர்த்தல்—புதுப்பித்தல் ஆகியவைகளுக் கான காலவரையறையை நீடிக்குமாறு மாவட்டச் செய லாளர்கள் — கிளைக்கழகச் செயலாளர்கள் — ஆகியோர் வேண்டிக்கொண்டதன் பேரில் தலைமைக் கழகத்தின் 5/59-ம் எண் அறிக்கைப்படி இறுதி நாளாகக் குறிப்பிட் டிருந்த 30-6-59-ம் நாளிலிருந்து மேலும் ஒரு திங்க ளுக்கு—31—7—59-ம் நாள்வரை உறுப்பினர் சேர்த்தல்— புதிப்பித்தல் ஆகியவைகளுக்கான கால வரையறை நீடிக்கப்பட்டிருக்கிறது.

'அறிவகம்', சென்னை-13
13—4—1959

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர், தி. மு. க.

தொல்காப்பியச் சுவை

௩. கற்பியல்.

களவியல் தான் கற்பியலின் அடிப்படை என்பதைச் சென்ற கட்டுரையில் கண்டோம். "களவியல் அடிப்படையில் தோன்றிய வாழ்வு கற்பியலில் எத்தகைய நிலையை அடைகிறது? கற்பியல் முறை வாழ்வுக்கு என்ன நன்மையைச்செய்கிறது?" என்பன அறிந்து கொள்ளவேண்டிய செய்திகளாகும்.

தலைவனும் தலைவியும் களவில் மனம் ஒன்றுபட்டுப் பெற்றோர் ஒப்ப மணம் புரிவர். அவ்வாறு நடைபெறும் மணத்தில் "கரணம்" உண்டு. அதாவது தாலி கட்டுதல் போன்ற சடங்குமுறை உண்டு. பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்தான் இம்முறைகள் ஏற்பட்டன.

கற்பியலில் காணப்பெறும் செய்திகள் தலைவி தலைவன் உள்ளப் பாகுபாடுகள், இருவர் தம் உரிமைகள், தலைவன் பரத்தமை ஒழுக்கம், தோழி தலைவி கண்டித்தல், தலைவனுக்குத் துணையாக வருபவர்கள் முதலிய பல செய்திகள் கூறப்படுகின்றன.

அனைத்திலும் மேலாகக் கற்பியல் என்றால் என்ன என்பதையும் விளக்கமாகக் கூறுகிறார். களவு முறையில் உள்ளம் ஒன்றுபட்ட தலைவன் தலைவியர் இருவரை உலகம் அறிய ஒன்று படுத்தல். கொள்ளும் முறைமை உடையவன் ஏற்கும் மரபுடையாளைப் பெற்றோர் ஒப்பக் கொடுத்தலே கற்பியலின் கருவாகும். பெற்றோர் கொடுப்பதுதான் கற்பு என்றால் மனம் ஒன்றிச் செல்லும் உடன்போக்குக் கற்பாகாதா? என்ற ஐயம் எழக்கூடும். இதுவும் கற்பு அடிப்படையிலேயே நிகழ்வதால், அன்பின் அடிப்படையில் நிகழ்வதால், கற்பியலின்பாற்படும்.

இத்தகைய கற்பு வாழ்வில் தலைமக்கட்குத் துணையாக வருவோர் பார்ப்பார், பாங்கன், தோழி, செவிலி, பாணன், விறலி, விருந்தினர், கூத்தர், அறிவர், கண்டோர் முதலியோர் ஆவர். தலைவன் மணம் செய்து கொண்டபின் வாழ்க்கை நடப்பதற்குப் பொருள் வேண்டும். பொருள் தேடுதற்குத் தலைவன் புறப்படுவான். ஆனால் தலைவியும் தோழியும் பிரிவின் துயர் கூறித் தடுப்பர். தலைவனும் அவர்கள் மனத்தை அறிந்தவன் ஆதலால் செலவை நீக்குபவன்போல் தங்குவான். சின்னாட்கள் சென்றபின் மீண்டும் செலவை மேற்கொள்வான் என்பதைத் தொல்காப்பியர்...

> "செலவிடை அழுங்கல்
> செல்லாமை அன்றே
> வன்புறை குறித்தல்
> தவிர்ச்சி யாகும்"
>
> (தொல். 183. பொருள். இளம்.)

இவ்வாறு புறப்படும் தலைவனை விரைவில் திரும்பிவிடுமாறு தலைவி சில கூறுவாள். வழியில் இயற்கை நிகழ்ச்சிகள் அவனை (தலைவனை) விரைவுபடுத்தும் என்பாள். பறவையும், விலங்கினமும் ஈடுபாடு கொள்ளும் அன்புறு நிகழ்ச்சிகள் தலைவனைக் கடிதில் மீட்டு வரும். தவிர, அச்சம் காரணமாகத் தலைவன் திரும்புவதில்லை என்பதைத் தொல்காப்பியர்...

> "புணர்ந்துடன் போகிய
> கிழவோன் மனையிருந்து
> இடைச்சுரத் திறைச்சியும்
> வினையும் சுட்டி
> அன்புறு தக்க
> கிளத்தல் தானே
> கிழவோன் செய்வினைக்கு
> அச்சம் ஆகும்"
>
> (146. ,,) என்பார்.

தலைவனும் தலைவியும் இனிய வாழ்க்கையைப் பேணி இன்ப துன்பங்களை ஏற்று வாழ வேண்டும். வாழ்வில் ஏற்படும் அல்லவைகளை நீக்கி நல்லவைகளை ஏற்கும் பண்பு வேண்டும் என்று செவிலித்தாய் தன் வாழ்வின் பழக்கத்தைக் கொண்டு கூறுவாள்

> "கழிவினும் நிகழ்வினும்
> எதிர்வினும் வழிகொள
> நல்லவை உரைத்தலும்
> அல்லவை கடிதலும்
> செவிலிக் குரிய ஆகும் என்ப"
>
> (தொல். 151)

வாழ்வில் ஊடல் இருந்தால்தான் கூடல் சுவைக்கும் என்பது அறிஞர் கருத்தாகும். ஊடலுக்கு உறுதுணையாய் அமைந்தோர் பரத்தையர் ஆவர். அக்கால ஒழுகத்திற்கேற்பப் பரத்தையர் தாம் தலைமக்களிடையே ஊடல் தோற்றுவிக்கும் பொருளாய் அமைந்திருந்தனர். இன்றைய இருபதாம் நூற்றாண்டிற்கு இது பொருந்தாது என்றாலும் அக்கால மக்கள் அப்பரத்தையர் பிரிவினும் ஒரு வரன்முறையோடு இருந்தமை குறிக்கத் தக்கது.

பரத்தையர் பிரிவாற்றான் காமம் மிகுந்து தோன்றும் என்பதைக் கீழ் வரும் மூன்று சூத்திரங்களால் தொல்காப்பியர் கூறுகிறார்:

> "களவுங் கற்பும்
> அலர்வரை வின்றே"
>
> (160)

> "அலரில் தோன்றும்
> காமத்து மிகுதி"
>
> (161)

> "கிழவோன் விளையாட்
> டாங்கும் அற்றே"
>
> (162)

தலைவன் பரத்தையோடு துணங்கை விளையாட்டு விளையாடுவான். எல்லோரும்-தலைவி உட்பட-இவ்வாறு விளையாடியமையை அறிவராம். அறிந்த தலைவிக்குத் தலைவன்மேல் சினம் பொங்குவதிருப்பத் தலைவனை விட்டுப் பிரிந்திருப்பதுதான் பெரும் நோயாக இருக்குமாம். இதனால் காமம் மிகும்; காமம் மிகுவதான அன்பு அளவிறந்து தோன்றும். பின்னர் தலைவன் இல்லிற்கு மீண்டபின் அவன் அன்பைப் பெற்று மகிழ்வாளாம்.

தலைவன் பரத்தையாடித் திரும்பியவுடன் தலைவி அவனை உடனே வரவேற்பதில்லை, அவன் பரத்தை ஒழுக்கம் கேட்டு, கண்டு ஊர் சிரிக்கிறது என்று கூறி வாயில் மறுப்பாள். தலைவனோ இம்முறை தவறு என்று கூறி நுழைவான். மீண்டும் இவ்வொழுக்கம் நிகழப்பெற்றால் புதல்வனைப் பற்றிக் கொண்டு வாயில் பெற்று உள்ளே நுழைவான். இவ்விரண்டும் இல்லாத வேளை இடையிடையே பார்ப்பாரும், பாணரும் வாயில் நுழைவிற்குத் துணையாய் அமைகின்றனர். இவ்வாறே தலைவன் திரியலாமா? என்ற ஐயம் எழுதல் இயல்பு. இவ்வாறு அடிக்கடி நிகழப்பெற்றால் அது தலைவியால், தோழியால், அறிவரால் கண்டிக்கப்பெறும். தோழியே தலைவனை "அன்பற்றவனே" "கொடியவனே" என்று கூடக் கண்டிக்கும் உரிமையைப் பெற்றிருந்தாள்.

> 'பரத்தை மறுத்தல்
> வேண்டியுங் கிழவி
> மடத்தகு கிழமை
> உடைமை யானும்
> அன்பிலை கொடியை
> என்றலும் உரியள்"
>
> (தொல். 156)

களவு வாழ்க்கையின் அடிப்படையில் தோற்றுவிக்கப்பட்ட கற்பு வாழ்க்கையில் தலைவன் தலைவியிடம் காமத்துள் பணிய வேண்டும் என்கிறார். இது தொல்லாசிரியரின் கட்டளை என்று எண்ணுதல் தவறாகும். இதுபோல் தான் தமிழ மக்கள் வாழ்க்கை நடத்தினர் என்பதைக் கொண்டு இவ்வாறு கூறினர். காமமற்ற பிற வேளைகளில் தலைவி தலைவனைப் பணிந்து வாழ வேண்டும் என்று வரையறுக்கிறார்.

> "காமக் கடப்பினுட்
> பணிந்த கிளவி
> காணுங் காலைக்
> கிழவோற் குரித்தே
> வழிபடு கிழமை
> அவட்கிய லான"
>
> (தொல். 158).

உள்ளம் பக்குவப்பட்டால் தான் இரண்டு நண்பர்கள் வேறுபாடு இன்றி இயங்குதல் முடியும். அந்த உண்மை அன்றும் இன்றும் நின்று நிலவுகின்றது. தலைவன் - தலைவி இருவரிடையே உள்ளம் ஒன்றிக் களவியலில் பக்குவப்பட்ட பின்னர் தான் கற்பியல் தொடங்குவதால் இங்கு வேறுபாடே காண முடியாது. அத்தகைய பண்பட்ட உள்ளங்களிடையே போட்டிகளோ பொறாமையோ நிலவுதல் இல்லை. அதுமட்டுமன்றி விட்டுக் கொடுத்து ஏற்று வாழவும் முடிகின்றது.

தலைவன் நாளும் பல தொல்லைகளைச் சந்தித்து வாழ்க்கையை நடத்துபவன். பல சோர்வான நிகழ்ச்சிகள் தலைவியின் கவனத்திற்குக் கொண்டு வரப்பெறும். அவ்வேளைகளில் தலைவியேகூட காமக்கிழத்தி போல் இயங்கித் தலைவனைத் தழுவிக் கொள்ளவும், தாய்போல் உயர்ந்து நின்று அவனுக்கு அறிவுரை கூறவும், காதலி போல் பணிந்து நின்று அன்புரை கூறவும், நண்பன் போல் நடுவாக நின்று நயவுரை கூறவும் உரிமை கொண்டவள். உரிமை என்பதல்ல; அவள் இயல்பே அப்படி என்பதை,

> "தாய்போற் கழறித்
> தழீஇக் கோடல்
> ஆய்மனைக் கிழத்திக்கும்
> உரித்தென மொழிய
> கவவொடு மயங்கிய
> காலை யான"

(தொல். 171.) என்று இவ்வாறு விளக்குகிறார்.

தலைவன் புகழ் தன்புகழ் என்பதை தலைவி உணர வேண்டும். தலைவன் எடுத்துச் சொல்லும் எதுவும், எடுத்துச் செய்யும் எச்செயலும் முடிவுறுதற்குத் தலைவியும்தோன்றாத் துணையாக நின்று உதவுதல் கடமையாகும். அவ்வாறு ஈடுபடும் செயலில் சோர்ந்த வேளையில் அவனுக்கு உணர்ச்சியையும் ஊட்டக் கடமைப்பட்டவள் தலைவியே ஆவாள்: அவன் கொண்ட செயல் முற்றுப்பெறத் தலைவன் இடும் பணிகளைத் தவறாது இயற்றுதல் தலைவியின் பொறுப்பாகும். அங்குப் பணிந்த சொற்கள் பயன் விளைக்கும் என்பார்.

> "அவன் சோர்வு காத்தல்
> கடனெனப் படுதலின்
> மகன் தாயுயர்பும்
> தன்னுயர் பாகுஞ்
> செல்வன் பணிமொழி
> இயல்பாகலான"
>
> (தொல். 172)

கற்பியலில் வாழ்வு தொடங்கி விட்டோமே என்று தலைவி எப்பொழுதும் உரிமைகளை நிலைநாட்டவே எண்ணுதல் கூடாது. தன்னிடம் இயல்பாகவே பல சிறப்புகள் இருப்பினும் தலைவி எக்காரணம் பற்றியும், எந்நிலை பற்றியும் தலைவன் முன்னர்த் தன்னைப் புகழக்கூடாது.

> "தற்புகழ் கிளவி
> கிழவன்முற் கிளத்தல்
> எத்திறத் தானும்
> கிழத்திக் கில்லை
> முற்பட வகுத்த
> இரண்டலங் கடையே"
>
> (தொல். 178).

ஆனால் உலகியலில் பழக்கப்பட்டு அறிவியல் பயின்ற தலைவன் தன் சிறப்புக்களைக் கூறுதற்கு உரிமை உடையவன். அவனும் எப்பொழுதுங் கூறுதற்குரிமையில்லை; தொழில் மேற்செல்லும் வேளை கூறலாம் என்கிறார்.

— 8-ம் பக்கம் —

இராம. இராமநாதன் பி.ஏ. (ஆனர்ஸ்)

தற்காலத் தமிழ்க் கவிஞர்கள்

3. சுரதாவும் சுந்தரமும்.

சுரதாவும் சுந்தரனும்
தோற்றுவித்த பாக்கள்
கரங்கொண்டு நாடதனைக்
காட்டும் – உரம்பெற்றேன்
தென்றற் சுவைகாண்பீர்
தேனமுதம் உண்டிடுவீர்
சந்தத் தமிழ்மொழியாற் முன்.

பழகி வரும் உரை நடையை விட்டு அழகிய பாக்களை உருவாக்கும் கவிஞரிடையே நானும் கலந்து விட்டேன். விழியைக் குளமாக்கி, வேர்வையை மையாக்கி, வீரத்தை உரமாக்கிப் பாக்களை வடிக்கும் பாவேந்தரிடையில் நானும் பழகிய தன் விளைவே மேற்கண்ட வரிகள். தவறிருப்பின் மறந்துவிடுங்கள்.

இளங் கவிஞர் இருவர்-இருவரில் ஒருவர் தமிழையே பாடுபவர்-மற்றவர் முன்னரே மொழிந்தேன். பெண்ணின் பெருமைகளைப் பாடுபவர். கண்ணில் உருண்டோடும் கரு விழிகளில் எண்ணில் எது சிறப்பு? இருவரும் திரண்டு வரும் தீந்தமிழ்ச் சுவையின் உயிர்-உடல் ஆவர். வாழ்வில் காதல், வேண்டும்-சுரதாவே போதும்; நாடு வாழ வேண்டும்-சுந்தரனே சான்று.

சென்னையின் அலைக் கரங்களைத் தன் பாக்களால் பாடவிட்டு, நாடெல்லாம் 'இலக்கியத்தை' ஓடவிடும் சுரதா ஓர் இன்பக் கவிஞர்! சங்கம் வளர்த்த மதுரையில் தங்கத் தமிழைப் பரப்பிவரும் தியாகராசர் கல்லூரியில் மாணவ மணிகளிடம் கவி மொழிகளை வாரி வழங்குபவர் கதி. சுந்தரம்; ஒரு நாட்டு வேட்கைக் கவிஞர்! இவ்விருவரும் காதலும்-நாடும் காட்டும் கவினுறு காட்சியை என் நாவால், நெஞ்சால் கண்டவாறு காட்டுவேன்.

தொல்காப்பியர், வாழ்க்கையில் வீரமும் காதலும் வாழ்வின் விழிகள் என்றார். வீரத்திற்குத் தரப்படும் விலை மணம் என்பதைத் தமிழக "மஞ்சு விரட்டு" அறியும். எனவே நாட்டு விடுதலையை முன் நிறுத்தி, காதலைப் பின் காண்போம்.

"ஒரு நாட்டை அழிக்க வேண்டுமா? அப்படி என்றால் முதலில் அவன் மொழியை அழித்துவிடு"-என்றான் ஓர் அறிஞன். எனவே மொழி உணர்ச்சிதான் ஒரு நாட்டு மேன்மைக்கும் தாழ்விற்கும் படியாக அமைகின்றது. தமிழக மக்கள் மொழி வேட்கை கொள்ள வேண்டும்; கொண்டால் மேன்மை உண்டு என்பதைச் சுந்தரனார்—

"இந்நாடு மீண்டும்
எழில்பெற்றே ஓங்கிடவே
அஞ்சா(து) உழைக்கின்ற
ஆன்றோர்கள் — விஞ்சுபுகழ்
தேடிவரும் தாயின்
சிறப்பை எடுத்துரைத்தால்
நாடிவரும் இன்பப் நயந்து."—

என்று பொன்னித் துறைவனில் கூறுகிறார்.

நாடு, நாடு என்று மேடைதோறும் பேசிடுவோர் இன்று தொகையில் அதிகம்; அவரெல்லாம் நாடுகின்ற நாடு, வேறு; நம் கவிஞர் தேடுகின்ற நாடு, தேன் தமிழ்நாடு - அதைப் பெற்று நல்லவரே-நம்மவரே நாடாள வேண்டும் என்கிறார் கவிஞர்.

"நாடு பெருள்புகழை
நாடினால் அங்குள்ளோர்
கூடுதொகை கோடியெனக்
கூறுவதால் — கூடாதாம்
நல்ல தலைவர்கள்
நாடாள வேண்டுமிதை
வெல்வளவன் கண்டான்
விரைந்து"

புகழ்ச்சிச் சொற்களைக் கோவையாக்கிக் கூறி அறிவை மயக்கும் புரட்சிக்காரர்கள் புரிந்துள்ள வேலை இது-எது செய்யினும் ஏற்றமெனக் கூறி, எந்தமிழால் குழி தோண்டும் பழியுடையோர் பல்கிவிட்ட வேளை இது-மக்களே மாய்ந்துவிடாதீர்கள்! என்று கவிஞர் வேண்டுகிறார்.

"புகழ்மொழியால் ஏமாற்றிப்
புன்சிரிப்பால் நம்மை
அகழ்வாரின் உள்ளத்தே
ஆரும்—இகழ்ச்சியதை
ஆய்ந்துணர வேண்டுமே
அம்மொழியை நம்பிவிடின்
மாய்ந்தொழிவோம்
ஏற்பீர் மனம்"

நாட்டு மக்கள் நலத்திலே நாட்டம் கொண்டவர் கவிஞர் கதி. சுந்தரனார். வீடு வாழ்ந்தால் நாடு நலம் பெறும் என்ற நற்கொள்கை படைத்தவர்.

இலக்கிய நயம் தோன்ற எழுந்துலவும் பொருள்களைக் கனிச்சுவையோடு கலந்தளிக்கும் சுரதா, பெண்களின் பல் வரிசையைப் பற்றிக் கூறுகிறார். முல்லைச்செடி உலக மக்கள் அறியுமாறு வெளியே மொட்டவிழ்க்கும். ஆனால் இப்பெண்ணோ வாய்க்குள்ளேயே முல்லை அரும்பதனை வளர்க்கிறாள்.

"என்றிட்டான், நெற்குன்ற
வாணன்; முல்லை
அரும்புதனை வாய்க்குள்ளே
வளர்க்கும் மங்கை."

வாழ்க்கையின் உள்ளிடத்தை கூறுவதில் சுரதா ஒரு தனி முறையைக் கையாளுபவர். இவர் காட்டும் பாதையில் கரடுமுரடு இல்லை - கனியும் கன்னியுமே காணப்பெறும். தலைமக்கள் தம்முள்ளே மனம் ஒன்று பட்டால் தடை எங்கே உண்டு? ஆனால் இருவரும் பேசாவிட்டால் இடையீடு இருக்குமல்லவா? அதுதான் இது:

"ஒருநிமிடம் பேசவில்லை
குன்றவாணன்
உதடுகளும் பேசவில்லை;
ஓசை இல்லை!"

மக்கள் பிறந்தலும் இறத்தலும் உலகியல் உண்மை. இடைப்பட்ட காலத்தில் உள்ள வளர்ச்சிக்கு ஏற்ப எழுந்து விளங்கும் உணர்ச்சியும் அதன் விளைவும் செய்கின்ற மாறுதல்கள்-ஒரு திருப்பத்தையே காட்டக் கூடும். வாழ்நாளில் செய்தற்கென்றே வரையறுத்த திட்டங்கள் பலவும் வகையாக முடிவதும் உண்டு-அன்றி வராது போதலும் உண்டு. இந்நிலையில் இயலாதவை இதயத்தே இடமாய்க் கொண்டு மாயும். அழகு மிழும் சொற்களைத் தேன் சுவையோடு தெவிட்டாமல் தருபவர் இறப்பின் சொற்கள் நாவினிலே நின்று வீழும். இளமையிலே சாவு என்றால் என்றும் இளமையோடு இறந்த பேறு கிடைக்கும். இவைகளையெல்லாம் சுரதாவைக் கூறுங்கள் என்றால்,

'நான்செத்தால், என்னோடு
இளமை சாகும்;
நான்கண்ட கனவுகளோ,
கண்ணில் சாகும்;
தேன்சொற்கள், நாக்கினிலே
சாகும்; வாழ்வில்
சேகரித்த ஆசையெலாம்
நெஞ்சில் சாகும்!"

என்பார்.

பாரதியாரைப் பாடாத, பரவதா பாவலரும் - நாவலரும் இல்லை எனலாம். ஆனால் அப்பாரதியைப் பாடுவதாலும், புகழ்வதாலும் தம் புகழ் தாரணியில் தழைக்க வேண்டும் என்ற குறுகிய நோக்கம் கொண்டவரும் உண்டு. சுரதாவும் பாரதியைப் பாடுகிறார். அங்கே பாரதியை, அவர் தம் உள்ளத்தை, உணர்ச்சியை பளிச்சென்று விளக்கும் பான்மை படித்தின்புறக் கூடியது. பாரதியாருக்கு விழாக்கள் எடுப்பதும் - திரைப்படங்கள் தீட்டுவதும் அவருக்கு நாம் செலுத்தும் நன்றி என்றாலும், அவருடைய வாழ்வில் பட்டுத் தேய்ந்த துயரக்கண்ணீரைக் காணோம்! அவர் வாழ்வில் கண்ட வறுமைத் தோற்றத்தை இன்று பாரதி உருக்கொள்ளும் பண்பாளரிடம் காணோம்; எனவே உண்மைக் கவிஞன் பாரதி அல்ல இன்று காண்பது-அவருடைய எழுத்துக்களை விலையாக்கி, எழில் உருவை விளம்பரமாக்கிப் புகழ் தேடுவோரே அன்றிப் பிறர் அல்ல. இவைகளின் சொற்கூட்டம்தான் இது!

"தன்கரத்தைக் கண்ணீரில்
கழுவிக் கொண்டு
தமிழ்வளர்த்த பாரதியார்,
ஒருநாளேனும்
பொன்மோதிரம் போட்டுக்
கொண்டதில்லை;
பொருள்சேர்க்கும் ஆசைஅவர்க்
கிருந்ததில்லை."

சில சொற்களைப் பற்றிய தெளிந்த உண்மையை அறிய நாம் ஆவல் கொள்வதுண்டு. 'கலை' என்றால் 'கல்'-கற்பது என்பதன் அடியாகப் பிறந்தது என்று அறிய மகிழ்கிறோம். அதுபோல், பல சொற்களுக்குச் சுரதா பாடும் பான்மை பயன் தருவதாகும்.

"மலைக்க வைப்பதால்
மலைஎன்று அழைக்கும்
காரணம் பெற்றதுஇக்
கருங்கல் வீக்கம்!"

'தமிழை இகழ்ந்தால் அவரைத் தாய் தடுத்தாலும் விடேன்' என்றார் ஒரு கவிஞர். ஆனால் சுரதாவோ பெண்கள்- தமிழ்க்குலப் பெண்கள் விழிகளே போதும் என்கிறார். தமிழ் மறத்தியர் கண்களில் வாள்கள் இருந்தன என்கிறார். ஆனால் கண்ணோ தாமரை - கண்ணின் குணமோ 'வாள்' என்கிறார்.

"தமிழ்மொழிப் பெண்களின்
தாமரை விழிகளில்,
வீரம் வளர்த்திடும்
வாட்கள் இருந்தன."

கவிஞரின் உணர்ச்சிகள் கட்டுப்பாடான வழிகளில் செல்லும்போது கவினுறும் கருத்துக்கள் எழுதலைக் காண்கிறோம். இவர்தம் தொண்டு நாட்டு விடுதலைக்கு வேண்டப்படும் ஒன்றாகும். வாழ்க சுரதா; சுந்தரம்!

முற்றும்.

நண்பர் "கதிரவன்" முன்பு சில இதழ்களில் தற்காலத் தமிழ்க் கவிஞர்களைப் பற்றிச் சில கட்டுரைகள் வரைந்திருந்தார். அவ்வரிசை இக்கட்டுரையோடு முடிவுறுகிறது.

—ஆ-ர்.

"குறளைப் பறையறைந்து குமரித் தமிழ் வளர்க்கும்"
காரைக்குடி திருக்குறட் கழகத்தாரின்
ஏழாவது
குறள் விழா
ஜூலை
17, 18, 19
தேதிகளில்
நடைபெறும்.



பாத்திரப் படைப்பு

— முன் இதழ்த் தொடர்ச்சி —

சரித்திரத்தில், "பொம்ம"னுக்கிருந்த போராட்டத் துடிப்பைவிட, அவனது சமாதான முயற்சியே அதிகமாகக் காட்சியளிக்கிறது. கம்பெனித் துரைமார்களோடு, அவன் நட்புக் கொண்டிருந்தான். துரைமார்கள் தனக்கு உதவி செய்து, "பாஞ்சாலங்குறிச்சியை எப்படியாவது காப்பாற்றிக் கொடுப்பார்கள்! கொடுப்பார்கள்!" என்று எதிர்பார்த்தான். பாஞ்சாலங்குறிச்சி ஒரு பஞ்சப் பிரதேசமாக இருந்த காரணத்தால் சரியான விளைச்சலில்லாமலிருந்தது. அதனுல் வரி கொடுக்கப் பணமில்லாமல் வருந்தினுன். "வரியா கேட்கிறீர்கள்?" எனக் கொதித்தெழுந்ததாக எந்தச் சரித்திராசிரியரும் நமக்குக் கூறவில்லை. வரி கொடுக்க முடியாதவனுக இருந்தான் என்பதுதான் உண்மை. இல்லை என்ருல், "வரியைக் கேட்க இந்த வெள்ளைக் கொக்குகளுக்கு என்ன உரிமை?" என்று முழக்கம் செய்ததாகக் கூறப்படும் வீரன், கலெக்டர் ஜாக்ஸன் கூப்பிட்ட இடங்களுக்கெல்லாம் ஏன் ஓடினுன்? "எப்படியாவது கலெக்டரைப் பேட்டி கண்டு, தன் பாளையத்தைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டும்" என்ற ஆசையைத் தவிர வேறு என்ன காரணம்? காலச் சூழ் நிலையையும், சரித்திரம் கூறும் உண்மைகளையும் ஒன்று படுத்திப் பார்க்கும்போது சரித்திரம் சொல்வதே நியாயமாகப் படுகிறது! வெறும் களிமண் கோட்டையையும், கம்புகளையும் தடிகளையும், குத்தீட்டிகளையும் வாட்களையும் மட்டுமே வைத்துக்கொண்டிருந்த பாளையம் பாஞ்சாலங்குறிச்சி. தன் பலத்தை, கட்டபொம்மன் அறிந்துதான் இருந்தான். "வெள்ளைக்காரன் தூரத்திலிருந்து பீரங்கியை வைத்துச் சண்டையிட முடியும். தன் படைகளோ கிட்ட நெருங்கினுல்தான் சண்டையிட முடியும்," என்பதை அவன் உணர்ந்துதான் இருந்தான். அதனுல் ஒவ்வொரு முறையும் சமரசத்திற்கு முயன்று பார்த்தான். வெள்ளையர்கள் அவனை அலட்சியப் படுத்திவிட்டார்கள். "அவ்வளவு பெரிய திப்புசுல்தானையே மடக்கிவிட்டோம். இந்தக் கடுகு எந்த மூலை?" என்றே அவர்கள் கருதினுர்கள். எந்தச் சமரச முயற்சிக்கும் அவர்கள் சரியான பதில் கொடுக்காதுஅலட்சியமாக இருந்ததால், வேறு வழியின்றிக் கட்டபொம்மன் போரில் குதித்தான் மனம் விரக்தியடைந்த நிலையில் "வெள்ளையரை பயமுறுத்திப் பார்ப்போம்!" என்றுதான் போரின் முதற் கட்டத்தைத் துவக்கினுன் அவன். அவன் எதிர்பாராத விதமாக, குறுகிய காலத்திற்குள் அவனது கோட்டை விழுந்தது. கோட்டை விழுந்ததும் காட்டுக்குள் ஓடினுன். காட்டுக்குள் அவன் கதறியழுததை, கலங்கிப் புலம்பியதை, ஏட்டுப் பிரதிகள் உருக்கமாகத் தெரிவிக்கின்றன. காட்டுக்குள் இருந்தபடியே, "யாரிடம் அடைக்கலம் கேட்கலாம்?" என்று ஆலோசனை நடத்தினுன் அவன். அப்படியே புதுக்கோட்டை எல்லைக்குள் அடைக்கலம் புகுந்தான். பிறகு பிடிபட்டான்; தூக்கிலிடப்பட்டான். இந்தச் சரித்திரத்தில், எந்த இடத்தில் அவனுக்கு வீராவேசம் வந்திருக்க முடியும்? தவிர்க்கமுடியாத நிலையில் போர் மூண்டதும், அவன் தாவிக் குதித்திருப்பான்; சத்தம் போட்டுப் பேசியிருப்பான்.

அப்படிப்பட்ட ஒரு சிறு பாளையத்தானை, சேரன் செங்குட்டுவனைவிடப் பெரியவனுகப் படைப்பது போன்ற மடத்தனம் வேறு எதுவுமேயில்லை!

கண்ணதாசன்

ஒவ்வொரு நாளும் பிரச்னையிலே மூழ்கிக் கிடந்த ஒருவனை இடைவிடாமல் முழங்கியவனுகக் காட்டுவது, காலச் சூழ்நிலைக்கு ஒவ்வாது. இல்லை; அசல் கட்டபொம்மனே அப்படி முழங்கியவன்தான் என்ருல், அவன் அடிமுட்டாள் என்றுபொருள். ஒரு பாளையத்தைக்கூட ஆளத் தெரியாத பண்டாரம் என்று பொருள். தன் வலியையும் மாற்ருன் வலியையும் கணக்கிடாமல் கதறியவன், வீரனல்ல; முரடன். இப்படி எந்தத் திசையில் திருப்பினுலும், கட்டபொம்மன் சமரசத்திற்கு முயன்றவன் அல்லது முட்டாள்தனமான முரட்டுக் குணம் படைத்தவன் என்னும் இரண்டிலொன்று தான் பிடிபடுகிறதேதவிர, வீரன் என்ற பொருள் வரக் காணேம். நூறு குடிசைகளாலும், பத்துப் பதினைந்து மண் வீடுகளாலும் நிறையப்பெற்ற பாஞ்சாலங்குறிச்சி, கடைசிக் கட்டத்தில் துணிச்சலாக நின்றது என்பதால்தான், நாடோடிப் பாடல்கள் கட்டபொம்மனைப் புகழ்ந்தன.

இதை மனதில் நிறுத்திக்கொண்டு, புதிய கட்டபொம்மனைப் பார்ப்போமானுல், நமக்குச் சிரிப்பு வரும்.

நிற்க, பாஞ்சாலங்குறிச்சியைவிட, அதிகமாக செம்மைப் பண்புகள் நிறைந்த பாளையம் சிவகெங்கை. அதற்குச் சரியான எல்லைகள்உண்டு; எல்லைகளைக் குறிக்கும் படம் உண்டு. எப்பொழுதுமே அந்நியரை எதிர்த்த பெருமையுண்டு. நவாபுகளோடு முந்திய கட்டபொம்மன்கள் குலவிக் கொண்டிருந்த காலத்திலும், சிவகெங்கை எதிர்த்தே நின்றது. முதல் மன்னர் சசிவர்ணத்தேவரும் யாருக்கும் கப்பம் கட்டியதில்லை. அடுத்து வந்த முத்துவடுகத் தேவர், கும்பினி-நவாப் கூட்டுப்படையை எதிர்த்து, காளையார் கோவிலிலே மாண்டார். விடுதலை வீரன் ஐதரலியிடம் அடைக்கலம் புகுந்தவேலுநாச்சியும் மருதிருவரும், மீண்டும் சிவகெங்கையைப் பிடிப்பதிலேயே கண்ணும் கருத்துமாய் இருந்தார்கள். வத்தலகுண்டுக்குப் பக்கத்தில் தொல்லை கொடுத்துக் கொண்டிருந்த வேங்கை ஒன்றைக் கொன்று ஐதரின் நன்மதிப்பைப் பெற்றனர், மருதுபாண்டியர். ஐதரின் படைகளோடு, சிவகெங்கைக்கு வந்து, சிவகெங்கையை மீண்டும் கைப்பற்றினர். எந்தக் கட்டத்திலும் எவனுக்கும் அவர்கள் கைகட்டியதில்லை. அதனினும் மேலாக, நாட்டைத் திருத்தி அமைப்பதற்கு வெகுவாகப் பாடு பட்டார்கள். கட்டபொம்மன் எப்படி இருப்பான் என்று தெரிந்துகொள்வதற்கு, ஒரு சிலை கூட இன்று தமிழகத்தில் கிடையாது. அவன் காலத்தில் வாழ்ந்த நல்ல தமிழ் வல்ல புலவர்கள் அவனைப் பற்றிப் பாடவுமில்லை. அவன் அருகே புலவர்கள் இருந்ததுமில்லை. ஆனுல் மறவர் நாடு முழுவதிலும் மருதிநவர் சிலைகள் உண்டு. புலவர்களுக்குக் கொடுக்கப்பட்ட மானியங்கள், இன்றும் அவர்கள் புகழைப் பாடுகின்றன. நூற்றுக்கும் மேற்பட்ட சுவைமிகுந்த தமிழ்ப் பாக்கள், படிப்போரை மெய்சிலிர்க்க வைக்கின்றன.—இப்படி அஞ்சாத நெஞ்சுரமும் ஆண்மையும் கொடைத் தன்மையும் அத்தனை மக்களின் ஆதரவும் படைத்திருந்தார்கள் சிவகெங்கை மன்னர்கள். ஆனுல் அவர்கள் காலத்திய மக்கள் போரிலே சலிப்படைந்து, "அமைதியான வாழ்வு கிடைக்காதா?" என்று எண்ணிக்கொண்டு இருந்தார்கள். மருதுபாண்டியர் அதை உணர்ந்திருந்தார்கள்.-ஆம்! அதை உணர்ந்தவர்களாக நான் மருதுவைப் படைத்தேன். முதற் கட்டத்தை, அவர்கள் தடுக்க நினைக்கிருர்கள் என்று கொண்டு வந்தேன். ராஜதந்திரம் தெரிந்தவர்களாகக் காட்டினேன். இரண்டு முறை பல் பிடுங்கப்பட்ட ஊமைத்துரை எப்படி இருந்திருப்பான் என்று நினைத்து அப்படி உருவகப்படுத்தினேன். உண்மையில் சரித்திரம் எப்படி நடந்திருக்கக்கூடும் என்பதில் நான் தெளிவு பெற்றேன். சட்டையில்லாத உடம்பு, தலையிலே துண்டு, காதிலே முருகு, அழகான குடுமி, காலிலே தண்டை, இந்த அமைப்பு முதல் கதையமைப்பு வரையில் ஒரு சீரான வடிவம் பெற்றேன். ஐதராபாத் அரண்மனையில் அவர்களைக் காட்டிவிடாமல், சிறிய சிவகெங்கை அரண்மனையை அப்படியே குறித்துக்கொண்டு வந்து நிர்மாணித்தேன். அதனுல் சரித்திர அமைப்பிலும் மருதிருவரின் பாத்திரப் படைப்பிலும் நான் இன்றைக்கும் பெருமைப்படுகிறேன்.

மதுரை மாணவர் எழுதியதுபோல், மருதிருவர் வெறுங் குதி குதிக்கவில்லை; விஷயமிருக்கிறது. தோழர் ம. பொ. சி. கட்டபொம்மனில் தனக்கு பணம் கிடைத்தது என்று மட்டுமே பெருமைப்பட முடியும். பாத்திரம் படைக்கத் தெரிந்தவர் என்று பெருமைப்படுவதற்கில்லை. ஆனுல், படம் எடுத்தவன் என்ற முறையில் பயன் பெருவிட்டாலும், பாத்திரம் படைத்தவன் என்ற முறையில் நான் பெருமைப்பட முடியும். ★

விற்பனையாகிறது!

அறிஞர் அண்ணு, டாக்டர் மு. வ.

முன்னுரையுடன்

மா. கி. தசரதன் எம். ஏ.

எழுதிய

"தணலில் தங்கம்"

விற்பனை உரிமை:

"தென்றல்" சென்னை-6.

தனிப் பிரதி ரூ. 1-50.

தபால் செலவுடன் ரூ. 1-60.

விற்பனையாளருக்கு கழிவு 20%.

தேவையுள்ள விற்பனையாளர்கள் "தென்றல்" முகவரிக்கு எழுதுக.

— 4-ம் பக்கத் தொடர்ச்சி —

இந்த நூற்றுண்டில் இருந்துதான் அரசன் தனது எதேச்சாதிகாரங்களை இழந்தான்.

அமைச்சர் தேர்வு

அரசன் மேற்கூறியவாறு தன் அதிகாரங்களைஇழந்துவிட்ட காரணத்தால், அடுத்தபடியாக அரசாங்கத்தில் முதன்மையான அங்கம் வகிப்பது யார் என்ற கேள்வி எழலாயிற்று. அமைச்சர்கள் இதுவரை அரசனுக்குப் பொறுப்புள்ளவர்களாக இருந்தார்கள். ஏனெனில் அவர்களைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பும் அவர்களுக்கு ஆணையிடும் பொறுப்பும் அரசனிடமே இருந்தன. இனி அவர்கள் காமன்ஸ் சபை, பிரபுக்கள் சபை எனும் இரு சபைகளைக் கொண்ட பாராளு மன்றத்தின் ஆதிக்கத்துக்கு உட்பட்டவர்கள்.

பதினெட்டாம் நூற்றுண்டு இரண்டு முக்கிய அரசியல் பிரச்னைகளை நிர்ணயித்தது. முதலாவதாக, பாராளு மன்றச் சபைகள் இரண்டில் எது உயர்ந்தது என்பது. இரண்டாவதாக, அரசாங்கத்தில் அரசனின் ஆதிக்கம் குறைந்த காரணத்தால், யார் அரசாங்கத்தை நடத்தி செல்லும் முக்கிய பொறுப்பை ஏற்றுக்கொள்வது என்பது.

மேலே குறிப்பிட்ட முதல் பிரச்னையில் காமன்ஸ் சபையே வெற்றி பெற்றது. அதாவது காமன்ஸ் சபையே பிரபுக்கள் சபையைக் காட்டிலும் அதிகாரத்தில் உயர்ந்தது என்ற தத்துவம் ஏற்றுக்கொள்ளப்பட்டது எனினும் 1688-ம் ஆண்டிற்குப்பின் ஒரு தலைமுறை வரை, குறுகிய சலுகை வாய்ந்தவர்களைக் கொண்ட (Limited Oligarchy) பிரபுக்கள் சபையின் ஆட்சியே நிலவிற்று. ஆனால் நாளடைவில் காமன்ஸ் சபை சிறிது சிறிதாக பிரபுக்கள் சபையினும் சக்தி வாய்ந்த சபையாக வளரலாயிற்று அரசாங்க விவகாரங்களில் அரசன் முக்கிய பங்கு கொண்டபோதிலும், பாராளு மன்றத்திற்கு அடுத்த முக்கியத்துவத்தையே கொண்டிருந்தான். அதைப்போல், பிரபுக்கள் சபையும் காமன்ஸ் சபைக்கு இரண்டாவது சபையாகவே விளங்கிற்று. காமன்ஸ் சபையே அமைச்சர் குழுவைக் கண்காணிக்கும் பெரும் பொறுப்பை உடையதாகத் திகழ்ந்தது.

பதினெட்டாம் நூற்றுண்டின்இரண்டாவது சாதனை நாட்டின் நடவடிக்கைகளைக் கவனிக்க அமைச்சர் சபை (Cabinet) என்ற ஒரு புதிய குழுவினைத் தோற்றுவித்ததாகும். அமைச்சர் குழு, இரு பெரும் பொறுப்புக்களை ஏற்க வேண்டிய அவசியத்திற்குத் தள்ளப்பட்டது. முதலாவதாக விரிந்த பாராளுமன்றத்தின் கையில் உயர்ந்த அதிகாரங்கள் ஒப்படைக்கப்பட்டதும், பாராளு மன்ற சபைகள் இரண்டினுடைய அங்கத்தினர்களைக் கொண்ட மந்திரி சபை, பாராளு மன்றத்தின் நடவடிக்கைகளை நடத்திச் செல்லும் பொறுப்பை ஏற்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இரண்டாவதாக, மந்திரி சபை, இதுகாறும் அரசன் கையில் இருந்து வந்த அதிகாரம் பாராளு மன்றத்தின் கைக்கு மாற்றப்பட்டதன் விளைவாக, ஆட்சி முறை, நிர்வாக இயந்திரங்களை இயக்குவதற்கான தத்துவங்களை உருவாக்க வேண்டியிருந்தது. இதனுல் மந்திரி சபை அரசாங்கம் (Cabinet Government) அமைச்சர்களை, பாராளு மன்ற உறுப்பினர்களில் இருந்து தேர்ந்தெடுக்க வேண்டியதாயிற்று. இவ்வாறுதான் பாராளு மன்றத்தை நடத்திச் செல்லும் பொறுப்பு அமைச்சர் குழுவின்மேல் வீழ்ந்தது. அரசனின் பெயரால், நாட்டை அமைச்சர் குழுவே ஆண்டபோதிலும், அமைச்சர்கள் கூட்டாகத் தங்களுக்கே உத்தரவிட்டுக்கொள்கிருர்கள் என்று சொல்லலாம். இதுதான், இங்கிலாந்தில் மந்திரி சபை (Cabinet Government) தோன்றிய வரலாறுகும்.

அரசியலமைப்பு வளர்ச்சியின் அடுத்த கட்டத்தில்தான், ஆங்கிலப் பாராளுமன்றம் நவீன அம்சங்களை எடுத்துக்கொண்டது. பதினெட்டாம் நூற்றுண்டில் நிலவிய மந்திரி சபை முறை, பெரும்பாலும், சிறிய செல்வந்தர்களை உறுப்பினர்களாகப் பெற்ற பாராளு மன்றத்தையே நம்பி வாழ்ந்தது எண்ணலாம். இந்தப் பாராளு மன்ற உறுப்பினர்கள் தம்மோடு வாழ்ந்த குடிமக்களின் நலனைப்பற்றிக் கிஞ்சித்தும் கவலை கொள்ளவில்லை. காமன்ஸ் சபை, பிரபுக்கள் சபையை விட மக்களின் பிரதிநிதித்துவத்தைப் பெற்றுத் திகழ்ந்த போதிலும், அது செல்வந்தர்களின் வகுப்பையே நம்பி வாழ வேண்டி இருந்தது.

பத்தொன்பதாம் நூற்றுண்டுதான், ஏனைய ஜனநாயக நாடுகளைப் போல், இங்கிலாந்தையும் உண்மையில் ஒரு ஜனநாயக நாடாக்குவதற்குக் காரணமாய் இருந்தது. இந்த நூற்றுண்டில்தான், இங்கிலாந்தின் ஆட்சி சலுகைபெற்ற ஒரு சிலரிடமிருந்து, உண்மையான மக்கள் பிரதிநிதிகளிடத்தில் வந்தது என்று கூறலாம். இந்த அரசியல் வளர்ச்சி உருவாவதற்கு, இங்கிலாந்து (1832-ம் ஆண்டில் இருந்து 1928-ம் ஆண்டுவரை) எண்ணற்ற சீர்திருத்தச் சட்டங்களை நிறைவேற்ற வேண்டி இருந்தது. இந்தச் சட்டங்கள், காமன்ஸ் சபை உறுப்பினர்கள் தேர்தலில் கலந்துகொள்ளும் தகுதி பெற்ற வாக்காளர்களின் எண்ணிக்கையையும், மக்கள் பிரதிநிதித்துவத்தையும் வெகுவாக உயர்த்திற்று. 1832-ம் ஆண்டிற்குமுன், பொது மக்கள் பாராளுமன்றத் தேர்தலில் வாக்களிக்கும் உரிமை பெறுவது என்பது முயற்கொம்பாகவே இருந்தது. பாராளுமன்ற உறுப்பினர்கள் தேர்தல் ஒரு சில செல்வாக்குப் பெற்ற மக்களாலேயே ஆட்டிப் படைக்கப்பட்டது 1832-ம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட சீர்திருத்தச் சட்டம், நாடு முழுவதும் மக்களின் வாக்குரிமையை இன்னும் விரிந்த அளவிலும் நேரிய முறையிலும் வழங்கிற்று. சுருங்கக் கூறின், இதுவரை உயர்தர, நடுத்தர வகுப்பினரின் பிரதிநிதித்துவ சபையாக விளங்கிய காமன்ஸ் சபை, மேற்குறித்த சட்டத்தால் உண்மையில் மக்களின் பிரதிநிதித்துவம் பெற்றதொரு சபையாக மாறியது. இதற்குப் பின் நிறைவேற்றப்பட்ட சட்டங்கள், சமூக, பொருளாதார நிலைகளில் தாழ்ந்து சீர்குலைந்திருந்த அடித்தள வகுப்பினருக்கு வாக்குரிமை நல்கியது. 1918-ம் ஆண்டில், வயது வந்த ஒவ்வொரு குடிமகனுக்கும் வாக்குரிமை வழங்கவேண்டுமென்ற தத்துவம் (Adult Suffrage or Adult Franchise) இங்கிலாந்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இவ்வாண்டில்தான் இதுவரை பொறுப்பற்ற சிறுபான்மை சலுகை பெற்றவர்களின் பிரதிநிதித்துவ சபையாக விளங்கிய காமன்ஸ் சபை, நாட்டின் நாலு பக்கங்களிலும் வாழ்ந்து வந்த மக்களின் உண்மையான பிரதிநிதித்துவ சபையாக வளர்ச்சி அடைந்தது. இந்த வளர்ச்சியின்விளைவாக, பாராளு மன்றத்தை நம்பி வாழ்ந்த மந்திரி சபையும், ஏனைய அரசாங்கத்தின் அங்கங்களும், மக்களின் நலனுக்காக ஆட்சி செய்யும் ஒரு புதிய மாறுதலைப் பெற்றன.

ஆங்கில அரசியலமைப்பின் இறுதியான சமகாலத்து வளர்ச்சிக் கட்டம் இரு உண்மைகளைப் புலப்படுத்தின. ஒன்று ஜனநாயகப் பண்பினும் விழுமியது. ஏனைய ஜனநாயகத்திற்கு முரண்பட்டது. நாட்டு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட காமன்ஸ் சபையின் அதிகாரத்திற்கும் கண்காணிப்பிற்கும் உட்பட்டுப் பணியாற்ற வேண்டிய அவசியத்திற்கு அமைச்சர் குழு தள்ளப்பட்டதால், அமைச்சர் குழு, பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவை நம்பி வாழ்வதை விட்டு, நேரடியாக வாக்காளர்களின் ஆதரவையே நம்பி வாழ ஆரம்பித்தது. இந்தப் புதிய அரசியல் தத்துவ வளர்ச்சி பத்தொன்பதாம் நூற்றுண்டைச் சேர்ந்தது என்று கூறுதலே சாலப் பொருந்தும். டேவிட் லாயிட் ஜார்ஜ், ஜே. ராம்சே மாக்டொனல்டு, இவர்கள் இந்த வளர்ச்சியைப் பெரிதும் பயன்படுத்திக்கொண்டார்கள்.

இரண்டாவது உண்மை, சர்வாதிகார அடிப்படையைக் கொண்டதாகும். நாட்டின் பெரும்பான்மை வாக்காளர்களின் பேராதரவைக் கொண்ட காமன்ஸ் சபையின் ஆதரவைப் பெற்றுத்தான் ஆள வேண்டும் என்னும் சூழ்நிலை உருவாகியதால் அமைச்சர் சபை, சர்வாதிகாரச் சபையாகவும் காமன்ஸ் சபையின் மீதே ஆதிக்கம் செலுத்தத்தக்கதொரு சபையாகவும் மாற ஏதுவாயிற்று. முதலாவதாக உலகப் போருக்குமுன் ஆட்சி பீடத்தில் அமர்ந்திருந்த ஆஸ்குவித் (Asquith) என்பாரின் மந்திரி சபையில் இந்தப் போக்குக் காணப்பட்டது. இன்று காமன்ஸ் சபைக்கு மந்திரி சபை அஞ்சி வாழ்கிறது என்பது அரசியல் வல்லுநர்களின் கருத்தாகும். ஒருபுறம் மந்திரி சபையின் அதிகாரங்கள் மேலோங்க ஆரம்பித்ததும், மற்றொருபுறம் சிவில் சர்வீஸ் அதிகாரிகளின நடவடிக்கைகளும், அவர்களின் ஆதிக்கமும் மேலோங்கிய வண்ணமிருந்தன. இதன் விளைவாக மந்திரி சபையும், பாராளுமன்றமும் அதிக அதிகாரங்களை நிரந்தர அதிகாரிகளிடம் குவிக்க நேரிட்டது. இதனுல் அமைப்பு முறைக் கோணத்தில் நோக்கின் இன்றைய ஆங்கிலப் பாராளுமன்றம், என்னதான் தத்துவ ரீதியில் மக்களாட்சியைப் பிரதிபலிக்கும் சபையாகத் தோன்றினுலும், உண்மையில் அது பல தலைமுறைகளுக்குமுன் நிலவிவந்த மக்களாட்சியினும் தரத்தில் குறைந்ததாகவேகாணப்பட்டது.

அரசியலமைப்பிற்கு விளக்கங்கள் தருதல்

ஆங்கில அரசியலமைப்பின் ஒன்றுக நல்லதான (Unique) பண்பு என்னவென்ருல், அதற்கு விளக்கங்கள் தருவதற்கென யாரும் நியமிக்கப்படவில்லை என்பதுதான். 1874-ம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட ஸ்விஸ் நாட்டு அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு விளக்கந்தரும் அதிகாரம் தேசியக் கவுன்சிலுக்கு உண்டு. 1919-ம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட ஜெர்மன் அரசியலமைப்புச் சட்டத்திற்கு விளக்கந்தரும் அதிகாரம், அதற்கென நியமிக்கப்பட்ட தனி நீதிமன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ளது அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அரசாங்க அதிகாரிகள் அனைவரும் 'அரசியலமைப்பை நாங்கள் ஆதரிப்போம்'' என்று விசுவாசப் பிரமாணம் எடுத்துக்கொண்டபோதிலும் அவ்வரசாங்கத்தின் சட்டசபை, நிர்வாகக் கிளைகள் இறுதியாக அரசியலமைப்புக்கு விளக்கந்தரும் அதிகாரத்தை நீதிமன்றங்களுக்கே வழங்கியுள்ளன. இங்கிலாந்தில், அரசனும், பாராளு மன்றமும் சட்டமென்ருல் எத்தகைய அரசியல் மாற்றங்களையும் செய்யலாம் என்பது உண்மைதான்.

''சட்ட பூர்வமான'' என்ற தொடர் வரம்பு செய்யப்பட்ட ஒரு சட்டத்தையே குறிக்குமாதலால், பாராளு மன்றச் சட்டங்கள் யாவும் சட்டப் பூர்வமானவைகளே. உலகத்தின் வேறு பல நாடுகளைப்போல இங்கிலாந்தில் ஆட்சிமுறை அதிகாரிகளையும், பாராளு மன்றம், சட்டசபை இவைகளின் உறுப்பினர்களையும் நடத்திச்சென்று அதே சமயத்தில், அவர்கள் தத்தம் வரம்புகளை மீருத வண்ணம் பாதுகாக்கும் பெற்றியினதாக அரசியலமைப்புத் தத்துவம் போற்றி வளர்க்கப்படுகிறது.

ஆங்கில அரசியலமைப்புக்கு விளக்கந்தரும் அதிகாரம் அதனைப் பயன்படுத்தும் மக்கள் கையிலேயே உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. ஆங்கில அரசியல் அமைப்பை ஒருவர் நன்கு புரிந்துகொள்ள வேண்டுமென்ருல், பாராளுமன்றச் சட்டங்கள், நீதித்துறை முடிபுகள்(Judicial Decision) ஒத்துக்கொள்ளப்பட்ட தத்துவங்களுக்கு அளிக்கப்படும் தற்போதைய விளக்கங்கள், பலவேறு கட்சிகளைச் சேர்ந்த பிரசித்தி பெற்ற அரசியல் வாதிகளின் கருத்துக்கள், மக்களின் எண்ணங்கள், விஞ்ஞான மேதைகளின் விமர்சனங்கள், நிர்வாகத்தினரின் பல திறப்பட்ட நடவடிக்கைகளைப் பற்றிய அறிக்கைகள், இவைகளையெல்லாம் எவ்வாறு பொதுமக்கள் வரவேற்கிருர்கள்; ஏற்றுக்கொள்கிருர்கள் என்பதையெல்லாம் உணர்தல் வேண்டும். ஆனுல் உண்மையில் அரசியலமைப்பைப் பற்றிய ஒரு பொது எண்ணம், கற்றறிந்த ஆங்கில மக்களிடத்திலும், வரலாற்றுப் புத்தகங்களிலும் மலிந்து கிடப்பதை நாம் காணலாம். அன்றியும் அரசியலமைப்பைப்பற்றிய பொது அறிவு, பள்ளிகளிலும் பல்கலைக் கழகங்களிலும் நன்கு புகட்டப்படுகின்றன. அரசியலமைப்பைப் பற்றிய அறிவினைப் பரப்பும் பணி, அரசியலுடனும் அரசாங்கத்துடனும் தொடர்பு கொண்டவர்களாலே மட்டுமல்லாமல் பொதுமக்களாலும் ஏற்று நடத்தப்படுகிறது. அரசியலமைப்பைப் பற்றிய நுணுக்க வேறுபாடுகள் காணப்படினும், அவ்வேற்றுமைகள் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். ஆனுல் ஆங்கில அரசியலமைப்புச் சட்டம், மக்கள் பொதுவான அரசியல் சமூக வாழ்க்கைகளை நடத்துவதற்கு உண்டாக்கப்பட்ட ஒரு சட்டம் என்ருலும், அந்தச் சட்டத்திற்கு விளக்கந் தருபவர்கள், பெரும்பாலும் ஒன்றிப் பொதுவாழ்க்கை நடத்தும் உயர்ந்த அல்லது தாழ்ந்த வகுப்புக்களைச் சார்ந்த மக்களேயாவார்கள்.

அரசியலமைப்புப் பற்றிய சட்டமும் சம்பிரதாயமும்

ஆங்கில அரசியலமைப்பு, ஒரு புறம் சட்டத்தையும் மற்றொரு புறம் சம்பிரதாயத்தையும் அடிப்படையாகக் கொண்டதாகும் என முதற்கண் விளக்கிக் கூறியவர் ''டைசி'' என்பவராவார். அரசியலமைப்புச் சட்டத்தில், அச்சட்டமொழிந்த ஏனைச் சட்டங்கள் தவிர்க்கப்பட்டவை என்ருலும், அத்தகைய சட்டங்கள் இங்கிலாந்தில் இருப்பதோடு மட்டுமல்லாமல், அவைகள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தனவாகவும் இருப்பது கண்கூடு. அத்தகைய சட்டங்களில் சிறப்பாக, உரிமை விண்ணப்பம் (1628), உரிமை மசோதா (1689), 1832-ம் ஆண்டில் நிறைவேறிய சீர்திருத்தச்

— 10-ம் பக்கம் —

—9-ம் பக்கத் தொடர்ச்சி—

சட்டத்தின் சில அம்சங்கள், வேறு சில பாராளுமன்றச் சீர்திருத்தச் சட்டங்கள், 1911-ம் ஆண்டில் நிறைவேறிய பாராளுமன்றச் சட்டம், பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் அரசியலமைப்பைப்பற்றி, 1931-ம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட வெஸ்ட் மினிஸ்டர் சட்டம் இவைகளைக் குறிப்பிடலாம்.

வெளிப்படையாகத் தன் நோக்கத்தைத் தெள்ளிதிற் புலப்படுத்தும் அரசியலமைப்பைப் பற்றிய ஒரு சில ஆங்கிலச் சட்டங்கள் இருப்பினும், அரசாங்கம் அல்லது ஆட்சிமுறை பற்றிய சாதாரண விவகாரங்களை வரையறுத்துக் காட்டும் அரசியலமைப்பு விதிகள் வேறு சில சட்டங்களில் காணப்படுகின்றன. சிற்சில சமயங்களில் நீதித்துறை முடிவுகள், அரசியலமைப்புச் சட்டங்களாக ஆக்கப்படுவதும் உண்டு. மேன்ஸ் பீல்டு பிரபு அடிமைகளைப் பற்றியும், தேடுகின்ற வாரண்டுகளைப் பிறப்பிப்பதைப்பற்றியும் அளித்த முடிபுகள் அரசியலமைப்புச் சட்டமாகியது என்பதை இதற்கு உதாரணமாகக் கூறலாம்.

ஆங்கில அரசியல் அமைப்பின் மற்றொரு பகுதி வழக்கத்தை (Custom) ஒட்டியதாகும். அதாவது அதிகார பூர்வமாக எங்கும் எழுதி வைக்கப்படாமல் அறிவிப்பில்லாமலேயே கால மாறுதலுக்கேற்ப வழக்காற்றில் வரும் விதிகள், பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்படும் சட்டங்களைப்போலவே செல்லத்தக்கனவும் மக்களைக் கட்டுப்படுத்துவனவும் ஆகும். அரசாங்கத்தின் பல்வேறு அங்கங்களிடையே நிலவ வேண்டிய உறவு முறைபற்றிய பல முக்கிய தத்துவங்களும், ஆட்சி முறை நிர்வாகத்தின் முழு இயந்திரமும், சட்டத்தின் அடிப்படையில் இயங்குகின்றன என்பதைவிட சம்பிரதாயங்களின் அடிப்படையிலேயே இயங்குகின்றன என்பது யாவரும் ஒப்பி முடிந்ததோர் உண்மையாகும். மந்திரி சபையின் பொறுப்புக்களைப்பற்றிய விதிகளும், பிரதம மந்திரியின் அதிகாரங்களை வரையறுக்கும் விதிகளும் பாராளுமன்ற எதிர்க் கட்சியின் நடவடிக்கைகள், அதற்குள்ள சலுகைகளைப்பற்றிய விதிகளும், பாராளு மன்றத்தைக் கலைப்பதைக் குறித்த விதிகளும் பெரும்பாலும் சம்பிரதாயத்தை ஒட்டியவையே ஆகும். வழக்கத்தால் தோன்றிய விதிகளைச் சட்டத்தின் துணைகொண்டு அமுல் நடத்தும் வழக்கமும் ஆங்கில அரசியலமைப்பில் உண்டு. 1911-ம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட பாராளுமன்றச் சட்டத்தில் பாதி, பத்தொன்பதாம் நூற்றாண்டில், பிரபுக்கள் சபைக்கும் காமன்ஸ் சபைக்கும் இடையில் நிலவிய உறவினைப்பற்றிய மரபினை அடிப்படையாகக் கொண்டதாகும். 1931-ம் ஆண்டில் நிறைவேறிய வெஸ்ட்மினிஸ்டர் சட்டம், 1926-ம் ஆண்டில் வெளியிடப்பட்ட பால்போர் தீர்மானத்தை (Balfour declaration) ஒட்டி எழுந்த சட்டமேயாகும். இன்னும் சற்று விளக்கமாகக் கூறவேண்டுமானால், ஆங்கில அரசியலமைப்புச் சட்டம் பெரும்பாலும் மக்களின் எண்ணங்களின் அடிப்படையில் எழுந்த சம்பிரதாய விதிகளையே பிரதிபலிக்கிறது. அது நீதி மன்றங்களால் திணிக்கப்படும் சட்ட விதிகளின் அடிப்படையில் எழுந்தவையல்ல.

இன்றைய ஆங்கில அரசியலமைப்புச் சட்டம், புரட்சிமூலம் பூத்த வேற்றுநாட்டு அரசியலமைப்புச் சட்டங்களைப் போலன்றி, காலப்போக்கில் சிறிது சிறிதாக வளர்ந்து முதிர்ச்சியடைந்ததொன்றாகும் எனில் அது மிகையாகாது. இத்தாலி, ஸ்பெயின், ருஷியா, ஏன் பிரான்ஸ் கூட தமது இன்றைய அரசியலமைப்பைப் பெறுவதற்குத் திடீர் மாற்றத்தை எதிர்பார்க்க வேண்டி இருந்தது. இதனால் அந்நாடுகள், புரட்சியினால் பலனடைந்த ஒரு குறிப்பிட்ட வகுப்பினரின் நலனையே அடிப்படையாகக் கொண்ட அரசியலமைப்புச் சட்டத்தை உடையனவாய் இருக்கின்றன. ஆனால் ஆங்கில அரசியலமைப்புச் சட்டம் நாட்டின் பல திறப்பட்ட வகுப்பினரின் எண்ணங்களைப் பிரதி பலிப்பதாக மிளிர்கின்றது. அன்றியும் அது கவர்ந்துள்ள எல்லா மக்களின் நல்லெண்ணங்களையும் அவர் தம் விருப்பங்களையும் கொண்டு இலங்குகிறது.

-கோ. கோதண்டராமன்

"தென்றல்"

ஆகஸ்ட் 22-ந் தேதி இதழில் தொடர்கிறது

கண்ணதாசன்

எழுதும்

"ஊமையன் கோட்டை"

(தொடர் கதை)

"ஆபாசவாணி"யில்...

கூரடிகளின் கூச்சலைக் கேட்டுக் கிறுகிறுக்கும் அமைச்சர்கள்!

காட்டு நரியின் ஊளையை, கானக் குயிலின் சொத்து என்கின்ற தலைவர்கள்!

சொறி நாயின் கத்தலை, சுந்தர கீதமாய்ச் சுவைக்கும் ரசிக மகா மேதைகள்!

ஆமாம்! இவர்கள்தான் இந்நாட்டினை ஆள வந்த அற்புதப் பிறவிகள். இவர்களும் இவர்களின் சீடர்களும் மூலைக்கு மூலை கத்திச் செவிகளைக் கிழிப்பது போதாதென்று, இப்போது புதுத் தொல்லைகளை வேறு தருகின்றனர். எத்தனை கோடித் துன்பம் தந்தாலும் ஏற்றுக்கொள்ளும் ஏமாளிகள் இங்கிருப்பதாலோ என்னவோ, எல்லா வகைத் தொல்லைகளும் இங்கே உருவெடுக்கின்றன.

"ஆபாச வாணி" என்று ஒன்றை வைத்துக்கொண்டு செவி கிழிய அவர்கள் போடும் கூப்பாடு சொல்லி முடியாது. அயர்ந்து ஓய்ந்த உள்ளங்களுக்குச் சிறிது அமைதி கிட்டட்டும் என்று வானொலிப் பெட்டியைத் திருகினால், அப்பப்பா! காதைக் குடையும் அடும் "போர்கள்"!

நாடகம் என்று ஏதாகிலும் ஒன்றை அவ்வப்போது நடத்துகின்றனர். அது என்ன நாடகமா? எவனாகிலும், எதையாகிலும் எழுதிப் போட, அவனவன் பெயருக்காக அதை நடத்துகின்றனர். அவை நன்கு அமைவதில்லை என்பதோடு, நாடகக் கதைகளும் எங்கோ, எப்படியோ, திருடியதாக இருக்கின்றன. தமிழில் புதுப் புது நாடகங்களை வளர்ப்பதற்கு வாய்ப்பளிக்கத்தான் இந்நாடகங்களை நடத்துவதாகச் சொல்லிக் கொள்கின்றனர். இந்நாடகங்களைத் தேர்ந்தெடுப்பதற்கென்று பதவி வகிப்போர், நடுநிலைமையோடு ஆராய்ந்து "நல்ல நாடகங்களா? சொந்தமாய் எழுதிய நாடகங்களா?" என்றெல்லாம் பார்த்து அவற்றை நடத்துவதாகச் சொல்லப்படுகிறது. ஆனால், எடுத்துக் காட்டுக்கு இரண்டு காட்டுகிறேன். திருச்சி வானொலியின் மணி மலர்ப் பகுதியில் ஒரு முறை **"நட்பின் சிறப்பு"** என்ற நாடகம் நடந்தது. 1953-ம் ஆண்டையப் பள்ளி இறுதித் தேர்விற்கான ஆங்கில உரை நடை நூலில் உள்ள "பித்தியஸ் அண்டு டேமன்" என்ற நாடகத்தைப் படித்துப் பாருங்கள். தமிழ் நாடகத்தில் தமிழ்ப் பெயர்கள் வருகின்றன. மற்றபடி எல்லாம் ஒன்றே! நட்பின் சிறப்பை நடத்திய திருச்சி வானொலி நிலையத்தார், ஏன் இதைக் கவனிக்க மறந்துவிட்டனர்? மொழி பெயர்ப்பு நாடகம் என்ற முறையில் நடத்துவதானால் முதலிலேயே அதைச் சொல்லியிருக்கலாமே? மூடி மறைக்க நினைத்தனரா? அவர்களுக்கே தெரியாதா?

அடுத்து ஒரு நாடகம் சூரிய காந்திப் பகுதியில் நடந்தது, "எதிர் பாராதது" என்ற பெயருடன். நாடகத்தைக் கேட்ட என் செவிகள் எதிர்பாராத அதிர்ச்சியை அடைந்தன. அப்போது கல்லூரி இடைநிலை வகுப்பில் ஆங்கிலத் துணைப் பாட நூலாக இருந்தது, "ஆங்கிலச் சிறுகதைகள்" என்பது. அதில் வந்த "போலிஸும் கோஷ்டி கீதமும்" என்ற கதை முக்கால் பகுதி அப்படியே இருந்தது. முடிவை மட்டும் தமிழ்நாட்டுச் சூழ்நிலைக் கேற்ப மாற்றியிருந்தார், தமிழில் எழுதியவர். அந்த எழுத்தாளர் "அவாள் வட்டாரத்தினர்" ஆனபடியால் அது அனுமதிக்கப்பட்டதோ, என்னவோ?

இப்படிப் பல இருக்கும், துருவிப் பார்த்தால். சென்னை வானொலியில் இதைவிடப் பயங்கர வேலைகள் நடந்ததை நிலைய இயக்குனரே கண்டு, காவல் துறையினர் உதவியை நாடியதை அறிவோம்.

புதிதாக ஆயிரக்கணக்கான நல்ல நாடகங்களை எழுதி அனுப்புவோர்க்கு வாய்ப்பளிப்பதில்லை. நிலையத்தில் திங்கள் தோறும் 300, 500 எனத் தின்று தீர்ப்போரும் நல்ல நாடகங்களை எழுதுவதில்லை. இந்த நிலையில் வெளியில் உள்ள எவனெவனுக்கோ வாய்ப்பளிப்பதற்காக நேர்மையைச் சிதைக்கின்றனர்; திறமையைக் குலைக்கின்றனர்.

அடுத்து, மொழிக் கொலை! தமிழ் நாட்டு வானொலி நிலையங்கள்தான் இவை. ஆனால் இங்கே குரல் கிளப்பும் சோழன் பேசுவான் இப்படி: "புலவரே! நேத்திக்கி வந்தேளாம்; செந்தேனுப் பாடினேளாம்; சபையிலே சொன்னா!

அப்படிச் சோழன் சொன்னதும் புலவன் பதில் தருவான், இப்படி!

"ஆமாம்! சாயரட்சை வந்தேன். நீங்கள் எங்கேயோ போயிட்டேள்னு...போங்கோ!"

அட, சோழா! சுவைத் தமிழ் வளர்த்த சேரா! சங்கம் வளர்த்த பாண்டியா! உங்கள் தமிழ் இப்படியா, போக வேண்டும்? உங்கள் கல்லறையைக்கூட விடமாட்டார்கள் போலிருக்கிறது, திருச்சி-சென்னை வானொலியினர்.

ஒரு முறை காந்தி பிறந்த நாளன்று "சுவடு" என்ற கால் மணி நேர நாடகம் நடந்தது அதில் கதாநாயகனின் தங்கையாக நடித்த மாமி பேசிய பேசிய பேச்சு..."கத்தரிக் கோல் கீத மொழி" என்றால் அதுதான். வெட்டு ஒன்று; துண்டு இரண்டாகப் பேசுவோரைப் பார்த்திருப்பீர். அந்த மாமியோ வெட்டு ஒன்று; துண்டு பத்தாகப் பேசினார். அந்தக் கீத மொழியை நான் என்றும் மறக்க முடியாது. அப்பப்பா! குரல் சோதனை என்று ஒன்றை வைத்து, வாய்ப்புக் கேட்டு வரும் தமிழர்களை, விரட்டு விரட்டென்று விரட்டுகின்றனர். அதை எல்லாம் கடந்து இந்த மாமி இங்கே வந்து நடித்தது எப்படியோ? அந்த மாமியின் குரலைச் சோதித்த "இன்ஜீனிய"ரும், "புரகிராம் எக்ஸிகியூட்டி"வும் பிறரும் எப்படித்தான் பொறுத்துக்கொண்டனரோ?

நிலையத்தில் குத்தகையின் பேரில் வேலை பார்க்கும் சிலர் 40-50 வயதைக் கடந்த காட்டுக் கூச்சலினர். அன்னாரின் குரலும் ரமணீயமாயிருக்கிறதென்றும், "மூர்த்தி சிறிதானாலும் குரல் கீர்த்தி பெரிதா"யிருக்கிறது என்றும் பாராட்டிப் புகழ்கின்றனர்; மாதா மாதம் சம்பளம் வேறு தருகின்றனர். நம் தமிழ்ப் பையன்கள் வந்தால்மட்டும் "என்னடா இது குரலா? காட்டுக்கத்தலான்னா இருக்கு?" என்று கிண்டல் பேசுவதில் அந்த அலுவலர்கள் சளைப்பதில்லை. அங்கே உள்ள சில தமிழ் அலுவலர்களும், அவாளுக்கு அஞ்சி, முத்தமிழ் மறந்து தாமும் அத்தமிழ் பேசுகின்றனர்.

"அட, கந்தா!" 'அட, சாமி!" என்று ஒரு வைதீக நண்பர் கடவுளைக் கூப்பிட்டு மூச்செறிந்தார் அந்த அப்பாவித் தமிழரை, நினைத்து! என்ன செய்வது? நாடு உருப்பட நல்ல தமிழ் வளர வேண்டும். அதை வளர்ப்பதில் வானொலி தவறிவிடக் கூடாது. அழகு தமிழை வழங்காத வரையில் அது ஆபாசவாணியாகவே இருக்கட்டும். நமது ஆசைகளை நிறைவேற்றுவதுதான் வானொலி எனப்படும். ஆமாம்! வானொலி என்ற தேனொலியே வேண்டும்! ★

ஐயம் அகற்று!

கண்ணதாசன் பதில் தருகிறார்.

கா. வேழவேந்தன், சென்னை-30.

"கிட்கிந்தையிலிருந்து இராமனுக்குத் துணையாக வந்தவர்கள் தமிழர்களே!" என்று பாரதரத்னம் ராஜாஜி சொல்கிறார்களே-இதுவரை யாரும் ஏன் மறுத்துக் கூறவில்லை?

தோழர் சிவஞானமும் தன்னை ஒரு தமிழர் என்று சொல்லிக் கொள்வதால் கிட்கிந்தைவாசிகள் தமிழர்களாக இருந்திருக்கலாம் என்று ஒரு ஐயப்பாடு எழுகிறது. அதனாலேயே மறுப்பு மௌனம் சாதிக்கிறது.

★

ஆ. வெங்கடாசலம், சுப்பிரமணியபுரம்.

தமிழ்ப் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றும் போது, கழகத்தின் உறுப்பினராக இருந்தாரா? ஆதரவாளராக இருந்தாரா?

அப்போதும், இப்போதும், எப்போதும், அவர் உறுப்பினர்.

★

இராசு. மதி, கோவை-1.

சப்பானுக்கு வருமாறு மேயர் அரசுவுக்கு அழைப்பு வந்ததைக் கண்ட சிவஞானம் போன்றவர்களுக்கு, சித்தம் கலங்கிப் பித்துப்பிடித்து விட்டதாமே?

இல்லை! ஏற்கனவே இருந்த பைத்தியம் அதிகமாகியிருக்கிறது.

★

தெ. அறிவரசு, தண்டையார்ப்பேட்டை.

ஜனசக்தியில் "மாஜினி" என்பவர், பதினெட்டாம் நூற்றாண்டில் "திராவிடம்" என்ற வார்த்தையே கிடையாது என்கிறாரே-உங்கள் கருத்தென்ன?

வடவரும் வடமொழி இலக்கியங்களும் பத்து, பன்னிரண்டாம் நூற்றாண்டுகளிலேயே தெற்கு நிலப்பரப்பு முழுவதையும் குறிப்பிடுவதற்கு, "திராவிடம்" என்ற வார்த்தையைப் பயன்படுத்தி வந்திருப்பதை அவருக்கு நினைவு படுத்துங்கள். திராவிட மொழி நூல் வல்லார் ஞா. தேவநேயப் பாவாணர் அவர்கள் இதுபற்றி எழுதியுள்ள கட்டுரையை, தோழர் 'மாஜினி"க்கு அனுப்புங்கள்.

★

எச். இக்பால், உடுமலைப்பேட்டை.

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் இராசாராம் நாயுடு ஒரு பொதுக்கூட்டத்தில், "கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்களுக்கு உதவி செய்ததால்தான் சென்னை நகரசபைத் தேர்தலில் தி. மு. க. வெற்றி பெற்றது" என்று கூறியிருக்கிறாரே! அவர்மீது மான நஷ்டஈடு வழக்குத் தொடரலாம் அல்லவா?

கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள் காங்கிரஸ் கமிட்டிகள் மூலமாகத்தான் விநியோகிக்கிறார்களாம். பக்தவத்சலம் நின்ற திருப்பெரும்புதூர்த் தொகுதியில் பீப்பாய் பீப்பாயாகக் கள்ளச் சாராயம் அதிகாரிகள் மூலமே விநியோகிக்கப்பட்டதாம். இப்படி ஓராயிரம் உண்மைகள் நம்முடைய கைகளில் இருக்கையில், தப்பிப் போய் தர்பாருக்குள் நுழைந்து விட்ட வராகத்தின் மீது மான நஷ்டஈடு வழக்கு எதற்காகத் தொடர்வது?

நேரு அவர்கள் கேரளம் வந்து போனதால் ஏதாவது மாறுதல் ஏற்பட்டதா?

ஏற்பட்டது! சட்ட விரோதமான காரியங்களைக் காங்கிரஸ்காரர்கள் தைரியமாகவே செய்ய முன் வந்திருக்கிறார்கள்.

★

இரா. தாமோதரன், திருப்பூர்.

வடமொழியிலுள்ள பெயர்களைத் தமிழாக்கி வைத்துக் கொள்கின்ற இந்நாட்களில், நீங்கள் சஹஸ்ரநாமம் என்று பெயர் வைத்துக்கொள்ளப் போவதாக ஒரு முறை "குமுத"த்தில் எழுதியிருந்தீர்களே — ஞாபகமிருக்கிறதா?

பல புனை பெயர்கள் இருப்பதால் ஒரேயடியாக இப்படி வைத்துக் கொள்வது நலம் என்று வேடிக்கையாக எழுதியிருந்தேன். அதைப் படித்ததும் உங்களுக்குச் சிரிப்பு வரவில்லையா? சீச்சீ, பசை!

★

ஆ. செம்மேனி, ஈரோடு.

தமிழில் வெளி வரும் வார—மாத மும்முறை—மாதம் இருமுறை ஏடுகளில் அதிகப் பிரதிகள் விற்பனையாகும் ஏடு எது?

குமுதம்! அடுத்த இடத்தில் ஆனந்தவிகடன். தினசரிப் பத்திரிகைகளைவிடக் குமுதமே அதிக விற்பனையாகிறது.

★

சி. பி. ஆறுமுகம், கோவை.

தாங்கள் திரைக்கதை-வசனம் எழுதும் படங்கள் மொத்தம் எவ்வளவு? அவற்றின் பெயர்களைச் சொல்லுங்கள்?

எம். ஜி. ஆர். நடிக்கும் ராஜா தேசிங்கு, பவானி, மன்னாதி மன்னன், திருடாதே, ராணி சம்யுக்தா மற்றும் கவலையில்லாத மனிதன், வீரக்கனல், மணிமண்டபம், பூ முடித்தவள் முதலியன.

"சென்னையில் சிவகெங்கைச் சீமையை விரைவில் எடுத்துவிட்டார்களே, இப்போது பார்!" என்று எரிகிறார்கள், மீசைநேசர்கள்! தங்கள் பதில் என்ன?

பஞ்சாங்கம் பல லட்சம் விற்பனையாகிறது; கலிங்கத்துப்பரணி குறைவாகத்தான் விற்பனையாகிறது.

★

கு. இளம்வழுதி, சேலம்.

தமிழகத்தையே தாய்நாடாகக் கொண்டு, தன்னலம் கருதாமல் உழைக்கும் உத்தமராம் புரட்சி நடிகரைப்பற்றிச் சில வரிகள் கூறுங்கள்!

கொள்கையில் வளர்ந்தவர்; கொள்கையை வளர்த்தவர்! அன்றும் இன்றும் வேறு எந்த நடிகரும் காணாத மக்களாதரவைப் பெற்றவர். பல பண்டாரங்களின் வயிறுகள் ஒரே நேரத்தில் எரியும் அளவுக்குப் புகழ் பெற்றவர். கலைவாணருக்குப் பிறகு ஒரு எம். ஜி. ஆர்.!

★

கே. ஏ. வையாபுரி. கொளத்தூர்.

தமிழரசுக் கழகத்தைச் சேர்ந்த ஒருவர் நீங்கள் ம. பொ. சி.யை, காக்கா பிடித்ததாகச் சொல்கிறாரே. என்ன சொல்கிறீர்கள்?

நான் பிடித்தேனோ, இல்லையோ! ஒரு உண்மையை ஒப்புக் கொண்டுவிட்டார்—ம. பொ. சி. காக்கா என்று! ம. பொ. சி.யை சோறு கண்ட இடமெல்லாம் சொர்க்கமென்று பறந்து போகும் காக்கைக்கு அவர் ஒப்பிட்டதற்கு என் நன்றி!

★

வீர. செல்வராசு, மயிலாப்பூர்.

"கல்கண்டு" பத்திரிகையைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

அது ஒரு குழப்பம். முக்கியமான எதிரியைத் தனியாகப் பிரித்தெடுத்துச் சண்டைச் செய்யத் தெரியவில்லை, அதற்கு, ஆனால் ஒன்று! ம. பொ. சி.யைக் கதிகலங்க அடித்துவிட்டது, அந்தப் பத்திரிகை! ம. பொ. சி.க்குக் கல்கண்டு பயம் தெளியவே, பத்தாண்டுகளாகும்.

(இதே கேள்வியைக் கேட்டுள்ள திருமங்கலம் சீ. தமிழ்ச்செல்வன். இதே பதிலைக் காண்க.)

★

முதல்வன், கடலூர்.

நிதிக்கும் மதிக்கும் அமைச்சராய் விளங்கும் திரு. சி. சுப்பிரமணியனார், நம் அண்ணாவைச் சவாலுக்கு அழைத்திருக்கிறார்களே! அதை அண்ணா ஏற்றுக் கொள்வார்களா?

இடத்தையும் நேரத்தையும் கேட்டு வாருங்கள். இன்றா? நாளையா? உடனே!

★

ஏ. வல்லவன், கங்குவார்சத்திரம்.

ம. பொ. சி.யின் தமிழறிவையே நீர் குறைத்து மதிப்பிடுகிறீரே! ஏன்?

என்னைப்போன்ற ஒரு தொண்டன் குறைவாகவே படித்திருக்கலாம். ஒரு கட்சியின் தலைவன் என்று வருபவருக்கு அடிப்படை விஷயங்கள் அத்தனையுமே தெரிந்திருக்கவேண்டும். எங்கே, கீழ்க் காணும் கேள்விகளுக்கு ம. பொ. சி. யிடம் பதில் கேட்டுப் பாருங்கள்!

(1) தமிழ் எழுத்தடுக்கு முறையில் "க"வுக்குப் பிறகு "ங"வும் "ச"வுக்குப் பிறகு "ஞ"வும் ஏன் வைக்கப்பட்டன? அடிப்படைத் தத்துவம் யாது?

(2) தமிழில் ஒரு சொல், ஒன்றுக்கொன்று முரண்பட்ட இரண்டு பொருள்களைத் தருவதுண்டா? உண்டெனில் அவை எத்தனை என்பதை எவ்வழியில் கண்டு பிடிப்பது?

(3) பாக்களின் ஒவ்வொரு இனத்தையும் பூக்களின் ஒவ்வொரு இனத்தோடும் ஒப்பிடலாம். என்றால், வெண்பாவுக்கு என்ன பூ? ஆசிரியப்பாவுக்கு என்ன பூ?

(4) கலிங்கத்துப் பரணியில் வரும் ஆறு கருத்துக்கள் நளவெண்பாவிலும் வருகின்றன. அவை எவை?

—இப்போதைக்கு இவற்றிற்கு மட்டும் பதில் கேளுங்கள். முடியுமானால் ம. பொ. சி. குறிப்பிடுகிற ஏதாவது ஒரு கல்லூரியில், ஏதாவது ஒரு நாளில், தமிழ், இலக்கியம், வரலாறு, பண்பாடு பற்றி விவாதிக்கலாம். தயவுசெய்து அவரை அழையுங்கள்.

★

கே. இளவழகன், மதுரை.

"தி. மு. க.வைச் சேர்ந்த அரை டஜன் நடிகர்களைத் தவிர பாக்கி அத்தனை நடிகர்களும் தமிழரசுக் கழகத்தைச் சேர்ந்தவர்கள்!" என்கிறார் ம. பொ. சி.. உங்கள் பதில் என்ன?

"அதோ, அவனுடைய சொந்த வீட்டைத் தவிர, பாக்கி எல்லா வீடும் என் வீடு!" என்று ஒருவா சொன்னால் அதற்கு என்ன பொருள்! சொந்த வீடு இல்லாத "பிளாட்பாரம்" என்று பொருள்! திரையுலகில் சிவஞான கிராமணியைச் சீந்துவாரில்லை. இரவல் சரக்குகளுக்காக ஏங்கித தவம் கிடக்கிறார். ★

— 2-ம் பக்கத் தொடர்ச்சி —

மனைவி செய்த பாவத்தைப் போக்குதற்காகக் கணவன் கங்கையில் நீராடுதற்கு வடதிசை நோக்கிப் போய்க்கொண்டிருந்தவன் ஒரு காட்டகத்தில் தங்கி இருந்தான் என்பதும், மனைவி பிறர்மாட்டு இரந்து பெற்ற பெரும்பொருளினால் தானஞ் செய்து தன் கருமத்தைத் தொலைத்துக் கொண்டாள் எனக் கேள்வியுற்றுக் காட்டகத்தே இருந்த அவன் மீட்டும் வீட்டிற்கு வந்தான் என்பதும் அடைக்கலக் காதை அறிவிக்கும் செய்தி. இச்செய்தியைக் கூர்ந்து கவனித்தால் ஒருவர் செய்த பாவத்தைக் கழுவுவதற்குத் தண்ணீர் போதும் அல்லது தானம் போதும் என்பது ஏற்படுகிறது.

இந்த நாகரீகத்திற்கு வேறான நாகரீகம் பழந்தமிழர் நாகரீகமாக இருந்ததென்பதைச் சிலப்பதிகாரம் காட்டுகிறது என்று எண்ணும்போது தனியான மகிழ்ச்சி தோன்றுதிருத்தல் இல்லை.

(தொடரும்)

சிரிப்புத்தான் வருகுதையா!

எந்தக் கட்சி பதவிக்கு வந்தாலும் காங்கிரஸ்காரனுக்குக் கோபம் வருகிறது. "தனக்கு, தனக்"கென்றே காங்கிரஸ்காரர்கள் இருந்துவந்தார்கள். கேரளா போச்சு! கோவை போச்சு! மதுரை போச்சு! சென்னை போச்சு! டில்லி போச்சு! பம்பாய் போச்சு! படித்தவர்கள் அதிகம் இருக்கிற இடமெல்லாம் காங்கிரசிற்கு, சமாதி. அதனல் காங்கிரஸ்காரர்கள் வயிறு எரிகிறது. இந்திராகாந்திக்கு டைபாயிடு! தேபருக்கு மலேரியா! ஜன்னி கண்டுவிட்டது; பிதற்றல் அதிகமாகி இருக்கிறது. அடுத்த பொதுத் தேர்தல் முடியும்போது சரிபாதி மாநிலங்களில் காங்கிரசிருக்காது. பல காங்கிரஸ் தலைவர்கள் லஞ்ச ஊழல் குற்றத்திற்காகத் தேடப்படக்கூடும். அவர்களிலே சிலபேர் சென்னையைச் சேர்ந்தவர்களாகவும்இருக்கக்கூடும். அப்படி நேருமென்கிற பயமிருப்பதால்தான் கேரளாவில் பயமுறுத்திக் காட்டுகிருன் காங்கிரஸ்காரன். காங்கிரசின் இப்போதையஉறுப்பினர்கள் எல்லாம் நவீன விக்ரமாதித்தர்கள். காந்தி என்பது ஒரு வகைக் கற்பூரம்; போஸ் என்ருல் போடடோவுக்கு "போஸ்" கொடுப்பது என்று நன்ருகத் தெரிந்து வைத்திருக்கிற "ரெக்ரூட்டு"கள் தான் காங்கிரசில் இருக்கிருர்கள். படகோ ஓட்டை; ஏறியிருப்பதோ வெறும் சோற்று மூட்டை; ஓட்டுபவனே முடம் என்று மாறிவிட்ட காங்கிரசை, ஜவஹர்லால் நேருவென்ன? செத்துப் போன அவரது அப்பன் மோதிலால் நேரு வந்தாலும் காப்பாற்ற முடியாது.

ஃ

ஏழைகளுக்குஎன்று ஏழெட்டுக் கட்சிகள் இருக்கின்றன. பணக்காரர்களுக்கு வேண்டாமா? சுதந்தரா கட்சி வந்திருக்கிறது. நிலப் பிரபுக்களெல்லாம் ஆதரவு கொடுக்கிருர்கள். எனக்கு மட்டும் ஒரு சந்தேகம். இந்தக் கட்சி ஓரளவாவது வளர்வதற்கு இன்னும் பத்து ஆண்டுகள் பிடிக்கும். இப்போதிருக்கிற தலைவர்களில் பத்து வருஷம்வரை எத்தனை தலைவர்கள் தாக்குப் பிடிப்பார்கள்? ஆச்சாரியாருக்கு வயது எழுபதைத் தாண்டிவிட்டது. என். ஜி. ரங்காவும் அதே பாதையில். ஏதோ, ஆச்சாரியார் பக்தி செலுத்துகிற பகவான் அவருக்கு நீண்ட ஆயுளைக் கொடுத்தால், சரி!

ஃ

இந்த லட்சணத்தில் சுதந்தரா கட்சி விரும்பினல் தமிழரசுக் கழகம் ஒத்துழைக்குமாம். தொண்டரில்லாத கட்சிக்குத் தொண்டரில்லாத தலைவரே ஒத்துழைக்க வருகிருர். அதே நேரத்தில் சிவஞான சாம்பிராணியார் சொல்கிருர், "சுதந்தரா கட்சிக்கு என்ன கொள்கை என்றே எனக்குப் புரியவில்லை" என்று! ஒருவர் சொன்னது போல் தன் கட்சிக்குரிய கொள்கையே அவருக்குப் புரியவில்லையே! பிற கட்சியின் கொள்கைகள் எப்படிப் புரியும்?

ஃ

மேயர் கோட்டும் சூட்டும் போட்டுக்கொண்டிருப்பதே சாம்பிராணியாரின் கண்களை உறுத்துகிறது. பகல் பட்டினிப் பண்டாரத்திற்கு, எதைப் பார்த்தாலும் பசி எடுக்கிறது. கோட்டும் சூட்டும் வெள்ளைக்காரனுடைய நாகரிகச் சின்னமல்ல. கால கட்டத்தில் மாறி வந்திருக்கிற மனிதனின் உடையமைப்பில் இது ஒரு அங்கம். கிராப் வைத்துக்கொள்வது தமிழன் பண்பாடா? வெள்ளைக்காரன் பழக்கம்தானே! தலைக்கு உள்ளே ஒன்றுமில்லாத சாம்பிராணியார் வெளியே ஏன் கிராப் வைத்துக் கொண்டிருக்கிருர்? உலகம் முழுவதற்குமே, உடையமைப்பில் அடிக்கடி மாற்றங்கள் உண்டு. அதில் ஒருவகைதான் கோட்டும் சூட்டும். அரசு போட்டால், அழகாயிருக்கிறது. சிவஞானம் போட்டால், அதன் பெருமையே அழிந்துவிடுகிறது. அதற்கென்ன செய்வது?

ஃ

"திராவிட நாடு சோறு போடுமா?" என்கிருர் முதலமைச்சர். அட, பண்டாரம்! சோற்றுப் பிரச்னைதானே முன்னலே வருகிறது. ஆட்சிக்குவந்த பன்னிரண்டு ஆண்டுகளில் அந்தப் பிரச்னையைக்கூடத் தீர்க்கமுடியாத கும்பலின் தலைவர், "பிரிவினை சோறு போடுமா?" என்கிருர். திருட்டுத் தடுக்கப்பட்டால், இருட்டுக் கூடப் பெருமைக்குரியதுதான். பயமிருக்காதல்லவா? இலங்கைக்காரன் கதவைப் பூட்டிவிட்டான். மலாயாக்காரனும் சாத்திவிட்டான். பர்மாக்காரனும் வாசலை அடைத்துவிட்டான். கதவில்லாத வீடு, இந்தக் கண்ருவி நாடு ஒன்றுதான். அரிசியாக ஒருபக்கம் போகிறது. பணமாக ஒருபக்கம் போகிறது. இதை எப்படித் தடுப்பது? பிரிவினை இதைத் தடுக்கும். பிறகு எல்லோர்க்கும் சோறு கிடைக்கும். போனல் போகிறது. காமராசரும் சாப்பிட்டுவிட்டுப் போகட்டும். ★

—6-ம் பக்கத் தொடர்ச்சி—

"கிழவி முன்னர்த்
தற்புகழ் கிளவி
கிழவோன் வினைவயின்
உரிய என்ப"

(தொல். 179.)

அவ்வாறு பொருள் பற்றிப் பிரிந்து செல்லும் தலைவன் தான் மேற்கொண்ட பெருஞ் செயலிலேயே கருத்துக்கொண்டு கடனுற்றுவான். அவன் முயற்சிகள் அனைத்தும் ஒரு முகப்பட்டுச் செயல் நிறைவுற வேண்டும். எனவே அவன் கருத்து வேறுபுறம் திரும்பத்தக்க நிலைகள் நிகழல் கூடாது. தலைவியிடம் இடையருப் பற்றுக்கொண்டவன் தலைவன். தலைவி பிரிவுத் துயரால் வாடுகிருள் என்பது போன்ற செய்திகள் அவனுக்கு எட்டக்கூடாது. காதிற் பட்டாலே அவனுள்ளம் சீர்கெட்டுச் சோர்வு ஏற்படும். எனவே வினையிடத்தே தலைவி பற்றிய செய்திகள் கூறுதல் பொருந்தாது என்பதை.

"கிழவி நிலையே
வினையிடத் துரையார்
வென்றிக் காலத்து
விளங்கித் தோன்றும்"

(184),

என்று கூறுவதுடன் எடுத்த செயல் இயன்ற உடன் வரவேண்டிய முதல் நினைவு தலைவியே என்கிருர்.

தலைவன் கற்பியலில் தலைவியை விட்டுப் பிரிவதைப்பற்றியும் ஆசிரியர் கூறுகிருர். பொருள் தேட ஓராண்டிற்குள் பிரிந்து செல்லலாம், அதைப் போல படையில் துணையாகச் செல்லவும் ஓராண்டுதான், ஆனல் கல்வி பற்றிப் பிரியும் பிரிவு மட்டும் மூன்ருண்டுகள் பிரியலாம் என்கிருர். எனவே கல்வியின் அருமை இதனின்று புலனுகின்றது. எக்காரணம் பற்றியும் தலைவன் மூன்ருண்டுகட்கு மேல் தலைவியைப் பிரிந்து வாழுதல் இல்லை என்பதை அழகுறக் கூறுகிருர்.

"வேந்துறு தொழிலே
யாண்டின தகமே"

(தொல். 187)

"ஏனைப் பிரிவும்
அவ்வியல் நிலையும்"

(தொல். 188)

"வேண்டிய கல்வி
யாண்டுமூன் றிறவாது"

(தொல். 186)

இவ்வாறு கற்பு வாழ்க்கை தொடங்கிய தலைமக்கள் வாழ்வில் தத்தம் மக்கட்குக் கூறுவன யாவை? இதற்குக் கூறும் விடைதான் தமிழமக்களின் சிறப்பிற்கு முடிமணியாய்த் திகழ்கிறது. வாழ்வெல்லாம் சிறப்போடு வாழ்ந்து, பெறவேண்டிய பேறெல்லாம் பெற்றுச் சிறந்து, நரை தோன்றி நடக்கவியலாக் காலத்தில் நடமாடப் போகும் நம்பியரை அழைத்து நவிலக்கூடிய சில செய்திகளைக் கூறுகிருர். இறந்த காலத்தில் இடைப்பட்ட இன்னல்களும் சிறப்புற்ற செயல்களும், சிந்திக்கத் தக்கனவும் நிகழ்ந்தவாறு எடுத்துக் கூறி, அவர்களையும் அறவழிச் செல்வோராய்ச் செய்து விடை பெறல் கற்பியல் வாழ்வின் கடைசிப் பகுதி என்றறிய மகிழ்ச்சி எல்லையிகந்து செல்கிறது.

"காமஞ் சான்ற
கடைக்கோட் காலை
ஏமஞ் சான்ற
மக்களொடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு
கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல்
இறந்ததன் பயனே"

(தொல். 190).

★

அடுத்த கிழமை —

தொல்காப்பியத்தில் ...
" அகமும் புறமும் "

வானெலி பற்றித் தனது வாசகர் ஒருவர் அனுப்பிய மடல் ஒன்றை 1—7—'59-ம் தேதி "குமுதம்" வெளியிட்டுள்ளது. அதை அனைவரும் படித்துணர இங்கும் எடுத்து வெளியிடுகிறோம். படித்துப் பார்க்கும் பாரத புத்திரர்கள் தரும் பதில் என்ன? இதோ கடிதம்:

இக் இப் போர்!

வானெலியில் வேலைக்குச் சேர விரும்புகிறவர்களுக்கு நடத்தப்படும் குரல் பரீட்சையில் படிக்கக் கொடுக்கும் தாளில் **"சர்க்கார் சர்கரை விலையை கட்டுபாடு செய்யும் என எதிர்பார்க்கப் படுகிறது"** என்பது போன்ற தமிழ்க் கொலைகள் நடக்கின்றனவே? குறிப்பிட்ட வாக்கியத்தில் சர்க்கரையில் 'க்' எங்கே? கட்டுப்பாட்டில் 'ப்' எங்கே? தாயின் கொலையைத் தடுக்க ஒரு தலையங்கம் எழுதலாகாதா?

—திருச்சி தி. அண்ணுமலை
பி. ஏ. (ஆனர்ஸ்).

நன்றி!

கோனர் தமிழ் உரை நூல்
S. S. L. C. 1960

பதிப்பித்த பிரதிகள் அனைத்தும் பத்தே நாட்களில் விற்பனையாகக் காரணமாயிருந்த ஆதரவாள மாணவர்களுக்கும், தமிழாசிரியர்களுக்கும் எங்கள் மனமுவந்த நன்றி!

இதுவரை உரை நூல் கிடைக்கப் பெருத மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்கி மறு பதிப்பு மீண்டும் அச்சாகிறது. ஒரு வாரத்தில் மீண்டும் பிரதிகள் கிடைக்கும் என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

பழனியப்பா பிரதர்ஸ்.

★

பூரண விற்பனை உரிமையாளர்கள்:
கார்த்திகேயன் & கம்பெனி
சென்னை-5.

ஆசிரியர்: கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர்: சுப. அருணசலம், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127, மவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ்நாடு